விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25

ஒலி 011 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 14 சனிக்கிழமை (30.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## 18 வயதுக்கு மேற்பட்டோர் வருமான வரி இலக்கம் பதிவு செய்வது கட்டாயம்


(கொழும்பு)

2024 ஜனவரி முதல் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வருமான வரி இலக்கம் (Tax identification number) பதிவு செய்வது கட்டாயமாக் கப்படுகிறது.

அவ்வாறு பதிவு செய்யாதிருப்பது 50,000/- ரூபாயை விஞ்சாத அபராதத்தை விதிக்கக்கூடிய தண்டனைக்குரிய குற்றமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இலங்கை மக்களின் நலனுக்காக இணைந்து செயற்படத் தயார்

### பிரதமரிடம் இந்திய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

இலங்கையின் நலனுக்காக இலங்கை மக்களுடன் இணைந்து செயற்படுவதே தமது பணி என இந்திய உயர்ஸ்தானிகரான சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவிற்கும் புதிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிற்கும் 15

# எதேச்சதிகாரமே நெருக்கடிக்கு காரணம்

### எதிர்க்கட்சி தலைவர் சஜித்



*(கொழும்பு)* நாட்டின் நெருக்கடி நிலைமைக்கு எதேச்சதிகாரமே காரணம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## முகக் கவசம் அணியுங்கள்

### சுகாதார அமைச்சு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா மற்றும் வேறுவிதமான நோய்நிலைமைகள் காணப்படுவதால் முகக் கவசம் அணியுமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. 02

## வட மாகாணத்தில் டெங்கு உச்சம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் டெங்கு தொற்றின் தாக்கம் உச்சநிலையில் இருப்பதாக சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

நாளுக்கு நாள் டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 16

## ஆட்டோ கட்டணம் அதிகரிக்கும்?

(கொழும்பு)

பெற்றோல் விலை அதிகரித்தால் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் முச்சக்கரவண்டி கட்டணம் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் 15

## நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது

### 450 கிலோவுக்கு அதிகமான போதைப்பொருள் பறிமுதல்

(கொழும்பு)

போதைப்பொருள் மற்றும் பாதாளக்குழுக்களை ஒடுக்கும் யுக்திய பொலிஸ் விசேட சுற்றிவளைப்புகளில் இதுவரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் நாடளாவிய ரீதியில் 17 ஆயிரத்து 837 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே ஹெரோயின், ஐஸ் உட்பட 450 கிலோவுக்கும் அதிகமான போதைப் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களை ஒடுக்கும் யுக்திய பொலிஸ் விசேட வேலைத்திட்டம் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் பணிப்புரைக்கு அமைய, முப்படைகளின் ஒத்துழைப்புகளுடன் நாடளாவிய 15

## நாட்டில் மற்றுமொரு கொரோனா மரணம் பதிவு

(அநுராதபுரம்)

நாட்டில் மற்றுமொரு கொரோனா மரணம் பதிவாகியுள்ளது.

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பெண்ணொருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் உயிரிழந்துள்ளார். 15

DLB அபிவிருத்தி லொத்தர்
இன்றைய சுப்பர் பரிசுப்பொதி
ரூ.48 கோடிக்கும் அதிகமாகும்
(Rs.485,259,206.20)
கப்ருக KAPRUKA
(C-2202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சஜித்துக்கு ரணில் சவால் இல்லை

## திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ரணில் விக்கிரமசிங்க எந்த விதத்திலும் சவாலாக இருக்கமாட்டார் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

விமல் வீரவன்ச தலைமையிலான உத்தர லங்கா சபாயக என்ற அரசியல் கூட்டணியை தமது கூட்டணியுடன் இணைத்துக்கொள்வது தொடர்பில் இன்னும் பேச்சு நடத்தப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டணியில் இணைத்துக்கொள்ள வேண்டிய தரப்புகள் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் கட்சித் தலைமைக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும், உத்தர லங்கா சபாகயவுடன் பேச்சு நடத்தப்படவில்லை.

கூட்டணி அமைக்கும்போது நாம் விழிப்பாகவே இருப்போம். ஏனெனில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களை இணைக்க முடியாது. ஊழல், மோசடிகள் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும்.

எது எப்படி இருந்தாலும் தனிநபர்கள் மற்றும் குழுக்கள் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் கட்சித் தலைவருக்கே உள்ளது.

எமது கொள்கையுடன் இணைந்து பயணிக்கக் கூடியவர்களே இணைத்துக்கொள்ளப்படுவார்கள். ஏனெனில் நாட்டைக் கட்டியெழுப்பப் புரிந்துணர்வு என்பது அவசியம்.

சஜித் பிரேமதாஸதான் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர். இதில் மாற்றம் இல்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க எந்த விதத்திலும் சவாலாக இருக்கமாட்டார் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# ஒரு மாதம் ஒத்திவைப்பு

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய

(கொழும்பு)

வாகனப் பதிவுகளை மேற்கொள்ளும் தீர்மானம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஜனவரி 01 முதல் வாகனப் பதிவு, வருமான வரிப்பத்திரம் பெறுதல், சொத்து கொள்வனவின் போது வரிக்கோப்பு திறப்பதை கட்டாயப்படுத்தும் தீர்மானம் ஒரு மாதத்தினால் ஒத்திவைப்பு செய்யப்பட்டுள்ளது. (ம-7)

# முகக்கவசம்...

கொரோனா தொற்று உள்ளிட்ட நோய்கள் குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சிகிச்சைகளுக்காக நாளாந்தம் வைத்தியசாலைகளுக்கு வருகைதரும் நோயாளர்களின் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தற்போது பரவி வரும் நோய்நிலைமைகளில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக பொது மக்கள் முகக்கவசங்களை அணிதல் மற்றும் கொரோனா தொற்று காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட சுகாதார நடவடிக்கைகளை பின்பற்றுவது அவசியம் எனவும் சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (ம-7)


# றோயல் அக்கடமி
# ROYAL ACADEMY

நாவலர் றோட், நல்லூர். அரசடி றோட், யாழ். நகர்.

## புதிய கல்வியாண்டு - 2024

தரம் 6 தமிழ்மொழி மூலம் English Medium

ஆரம்பம் 01.01.2024 திங்கட்கிழமை

கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், I.C.T, சிங்களம்

ஆகிய பாடங்களை ஒரே இடத்தில் கற்பதற்கான அரியவாய்ப்பு!

யாழ். றோயல் காலை 7 மணி

நல்லூர் றோயல் காலை 9.30 மணி

குறிப்பு : ● மாதாந்தப் பரீட்சைகள் இடம்பெறும். (புள்ளிகள் பெற்றோருக்கு வழங்கப்படும்.)
● ஒவ்வொரு தவணை முடிவிலும் பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பு இடம்பெறும்.

- இயக்குநர் -

(18425)




# 10ஆம் ஆண்டு நினைவுகளில்

அமரர். திருமதி

## பொன்னம்மா சின்னத்துரை

திதி : அபரபட்ச திருதியை 30.12.2023


விண்ணகத்தில் இருந்து நீங்கள்
வீசும் அன்பு எமை என்றும் வாழவைக்கும்
உங்கள் ஆத்மா சாந்திபெறட்டும்...

மலர்வு : 28.04.1935
உதிர்வு : 20.12.2013

கணவன் - பொ.சின்னத்துரை,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
அல்வாய் வடக்கு, அல்வாய்.

(C-8048)

# மரண அறிவித்தல்



தோற்றம் 10 - 11 - 1940

மறைவு 27 - 12 - 2023

## பொன்னம்பலம் செல்வராசா
(ஆச்சாரியார்)

யாலப்பை வீதி, மாதனை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் செல்வராசா அவர்கள் கடந்த 27.12.2023 (புதன்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் அவர்களின் அன்புச் சகோதரனும் சித்திரா, இந்திரா, கிருபா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தயாபரன், லோகநாதன், அற்புதராஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும் துவாரகன், விஜயரூபன், வனஜா, புருஷோத், சயன், பிரியங்கா ஆகியோரின் அன்புப் பேரனும் யஷ்விகாவின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 10.00 மணியளவில் பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

076 420 5415 (18428)


# தளபாடங்கள், Auto Parts விற்பனைக்கு

6 அடி நீளம், 4அடி உயரம் கொண்ட கண்ணாடி Showcase, கடை மர அலுமாரி, மரமேசை மற்றும் Auto உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு உள்ளது.

076 189 8521

(18430)





# உரிமையாளர் இடமாற்றம்

கோண்டாவில் ஸ்ரேசனடி இரண்டாம் (2) இலக்க கடையில் இயங்கிய உரிமையாளர்
**நல்லையா உதயகுமார்** (பெரியதம்பி)
ஆட்டிறைச்சிக் கடை கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடைக்கு மாற்றப்பட்டுள்ளது. என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருக்கின்றோம்.

ஆரம்பம் : 01.01.2024

தொ.இல. : 077 085 6479

(18417)

# காணி விற்பனைக்கு

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 24 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ளமுடியும்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

077 468 3354, 071 173 3911

(18426)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி மாதம் முதல் பணவீக்கம் அதிகரிக்கும்!

## இலங்கை மத்திய வங்கி அதிர்ச்சித் தகவல்

**(கொழும்பு)**

**எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் வற் வரி திருத்தம் அமுலாகும் போது, நாட்டின் பணவீக்கம் சடுதியாக அதிகரிக்கும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.**

1.5 சதவீதமாக தற்போது குறைவடைந்துள்ள நாட்டின் பணவீக்கமானது அடுத்த வருடம் 5 சதவீதமாக உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜானக்க எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட மக்களின் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் மற்றும் சேவைகளில் வற் வரி தாக்கம் செலுத்துவதால் இந்த நிலை ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள 15 சதவீத வற் வரியானது, 18 சதவீதமாக எதிர்வரும் ஜனவரி மாதம் 1ஆம் திகதி முதல் அதிகரிக்கப்படவுள்ளது.

இந்தநிலையில், தற்போது குறித்த வரி விதிப்பில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ள 69இற்கும் மேற்பட்ட பொருட்களுக்கும் அடுத்த வருடம் முதல் வற் வரி அறவிடப்படவுள்ளது.

அதில் எரிவாயு, எரிபொருள், மருத்துவ உபகரணங்கள், கைபேசிகள், இரசாயன உரங்கள் உள்ளிட்ட பல பொருட்கள் அடங்குகின்றன.




இதனால் பணவீக்கம் சடுதியாக அதிகரிக்கும் நிலை காணப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜானக்க எதிரிசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

## 24 மணித்தியாலங்களில் 1,467 பேர் கைது

(கொழும்பு)

நேற்றுக் காலை வரையான 24 மணித்தியாலங்களில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் போதைப்பொருள் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய மேலும் 1467 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், போதைப் பொருளுக்கு அடிமையான 51 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதவிர, போதைப் பொருள் தடுப்பு பிரிவினால் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்கள் பட்டியலில் இருந்த 164 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, ஹெரோயின், ஐஸ், கேரள கஞ்சா உள்ளிட்ட பெருமளவான போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

(நி-5-6)

## இறக்குமதியான இறைச்சியில் பன்றிக்காய்ச்சல் வைரஸ்

### அரச கால்நடை மருத்துவர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

சீனாவிலிருந்து சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட இறைச்சிகளில் இருந்து ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் வைரஸ் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அரச கால்நடை மருத்துவர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் "குறித்த இறைச்சிகளை அழிக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் கால்நடை வளர்ப்புத் தொழில் எதிர்காலத்தில் பாரிய நெருக்கடியை சந்திக்க நேரிடும்" என அரச கால்நடை மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் சிசிர பியசிறி எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி-5-6)

## மின் கட்டணத்தை குறைக்க உத்தேசம்

### பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

(கொழும்பு)

மின்கட்டணத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதம் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வற் வரி மின்கட்டணத்தில் தாக்கம் செலு த்தாது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மஞ்சுள பிரனாந்து தெரிவித்தார்.

மின்கட்டண திருத்தம் தொடர் பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது,

மின்கட்டண திருத்தம் தொட ர்பில் கடந்த 20 ஆம் திகதி பேச்சு வார்த்தையில் ஈடுபட்டோம். நீர் மின்னுற்பத்தி,நிலக்கரி மற்றும் எரிவாயுவுடனான மின்னுற்பத்தி மற்றும் அதற்கான செலவு தொடர்பான தரவுகளை மின்சார சபையிடம் கோரியுள்ளோம்.


எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி சகல தரவுகளையும் வழங்குவதாக மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

மின்கட்டண திருத்தம் தொட ர்பில் மின்சார சபை முன்வைக்கும் யோசனைகளை முன்னிலைப்படுத்தி, ஜனவரி மாதம் இறுதி வாரத்தில் மின் கட்டணம் தொடர்பில் பொதுமக்களிடம் கருத்து கணிப்பு கோர தீர்மானித்துள் ளோம். மின்சார சட்டத்துக்கமைய மின்கட்டண திருத்தம் தொடர்பான சகல நடவடிக்கைகளும் வெளிப்படையான முறையில் முன்னெடுக்கப்படும். எதிர்வரும் பெப்ரவரி மாதம் மின்கட்டணத்தை குறைக்க உத்தேசித்துள்ளோம். வற் வரி அதிகரிப்பு மின் கட்டண திருத்தத்தில் தாக்கம் செலுத்தாது என அவர் தெரிவித்தார். (நி-5-6)

## கிரிக்கெட் வீழ்ச்சிக்கு சதி செய்தோர் விபரங்கள் வெளியிடப்படும்-ரணதுங்க

(கொழும்பு)

இலங்கையின் கிரிக் கெட் வீழ்ச்சிக்கு வழிவகுத்த இந்தியாவுடன் சதியில் ஈடுபட்டதாக கூறப்படு வோர் பற்றிய விபரங்களை வெளியிடவுள்ளதாக இலங்கை கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க மிரட்டல் விடுத்துள்ளார்.




கொழும்பில் உள்ள பி.சரவணமுத்து சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று நடைபெற்ற சட்டத்தரணிகளுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் ஆரம்ப நிகழ்வின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் 10 அணிகள் பங்கேற்கும் சட்டத்தரணிகளுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் ஜனவரி 6 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## 'அஸ்வெசும' திட்டத்துடன் தொடர்புடைய கிராம அலுவலர்களுக்கு விசேட கொடுப்பனவு

(கொழும்பு)

அஸ்வெசும நன்மைகள் திட்டத்துடன் தொடர்புடைய அனைத்து கிராம அலுவலர்களுக்கும் மாதாந்த கொடுப்பனவாக 2,500 ரூபாய் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் இரண்டாம் கட்ட நிவாரணம் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"அஸ்வெசும நலன்புரித் திட்டத்தினூடாக இதுவரை 5 ஆயிரத்து 196 கோடியே 70 இலட்சம் ரூபாய் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரி நன்மைகள் உதவித் திட்ட த்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டப் பணிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதத் தின் முதல் வாரத்தில் ஆரம் பிக்கப்படும்.



உரிய முறையில் விண்ணப்பங்களை அனுப்ப முடியாத தரப்பினர் தொடர்பில் கவனம் செலுத்தி ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய மீண்டும் விண்ணப்பங் களை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தேசியமட்ட பளுதூக்கல் போட்டியில் மகாஜனவிற்கு 2 பதக்கங்கள்



தேசியமட்ட பளுதூக்கல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு இரு பதக்கங்கள் கிடைத்துள்ளன.

தேசிய மட்டத்தில் இளையோருக்கான பளுதூக்கல் போட்டி நேற்று முன்தினம் பொலநறுவையில் இடம் பெற்றது.

குறித்த போட்டியில் 87 கிலோ எடைப் பிரிவில் ஜதுசா, 103 கிலோ எடையினைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், 71 கிலோ எடைப்பிரிவில் சிறீவித்தகி 88 கிலோ எடையினை தூக்கி வெள்ளிப்பதக்கத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)

## சங்காவின் சாதனையை தகர்த்தெறிந்த கோலி






தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில், இந்திய அணி வீரர் விராட் கோலி 7 முறை ஒரே ஆண்டில் 2000 ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற சாதனையை படைத்தார்.

விராட் கோலி இரண்டாம் இன்னிங்சில் 76 (82) ஓட்டங்கள் எடுத்தார்.

இதன்மூலம் அவர் ஒரே ஆண்டில் 7 முறை 2,000 ஓட்டங்கள் எடுத்து சாதனை படைத்தார்.

இதற்கு முன்பு இலங்கை ஜாம்பவான் குமார் சங்கக்காரா 6 முறை ஒரே ஆண்டில் 2,000 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

இந்நிலையில் அவரது இந்த இமாலய சாதனையை கோலி முறியடித்துள்ளார். மேலும், கோலி அடித்த 30 ஆவது டெஸ்ட் அரைசதம் இது ஆகும். (நி-5-6)

## தென்னாபிரிக்கா அணிக்கெதிரான முதல் டெஸ்டில் இந்தியா தோல்வி

தென்னாபிரிக்க அணி முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியாவை 32 ஓட்டங்கள் மற்றும் இன்னிங்ஸ் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

சூப்பர் ஸ்போர்ட் பார்க் மைதானத்தில் நடந்த முதல் டெஸ்டில் இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதின.

இந்திய அணி தனது முதல் இன்னிங்சில் 245 ஓட்டங்கள் எடுத்தது. கே.எல்.ராகுல் 101 ஓட்டங்கள் விளாசினார்.

பின்னர் ஆடிய தென்னாபிரிக்கா 408 ஓட்டங்கள் குவித்தது. டீன் எல்கர் 185 ஓட்டங்கள் குவித்தார். அதனைத் தொடர்ந்து இந்திய அணி இரண்டாவது இன்னிங்சை தொடங்கியது.

தொடக்க வீரர்கள் ரோகித் சர்மா ரன் எடுக்காமலும் ஜெய்ஸ்வால் 5 ரன்னிலும் ஆட்டமிழந்தனர்.

அடுத்ததாக பவுண்டரிகளை விரட்டிய சுப்மன் கில் 26 ஓட்டங்களில் போல்டு ஆக அடுத்தடுத்து இந்திய அணியின் விக்கெட்டுகள் சீட்டுகட்டுப் போல் சரியத் தொடங்கியது.

விராட் கோலி மட்டும் ஒரு புறம் போராடி அரைசதம் அடிக்க, ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் வெளியேறினர்.

இறுதியில் இந்திய அணி 131 ஓட்டங்களுக்கு சுருண்டது. கோலி 82 பந்துகளில் ஒரு சிக்ஸர், 12 பவுண்டரிகளுடன் 76 ஓட்டங்கள் விளாசினார்.




இதனால் தென்னாபிரிக்க அணி அபார வெற்றி பெற்றது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் துறைமுகங்களை இந்தியாவுடன் இணைக்கும் திட்டம்

## விரைவில் ஆரம்பம் என்கிறார் இந்திய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

இலங்கையின் அனைத்து துறைமுகங்களையும் இந்தியாவுடன் இணைக்கும் பயணிகள் படகு சேவைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது

பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை, தலைமன்னார் மற்றும் திருகோணமலை துறைமுகங்கள் உட்பட பல்வேறு மூலோபாய திட்டங்களின் முன்னேற்றம் குறித்து விரிவாக கலந்துரையாடலில் ஆராயப்பட்டன.

மேலும் கடல்சார், விமானப் போக்குவரத்துத் துறைகளை முன்னேற்றுவதற்கும் இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதற்கும் இந்திய அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை புதிய இந்திய உயர்ஸ்தானிகர் வலியுறுத்தியுள்ளார்.

கடல்சார் மற்றும் விமான சேவைத் துறைக்ளில் ஈடுபட ஆர்வமுள்ள இந்திய முதலீட்டாளர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கப்பல் மற்றும் சிறிய கைவினைக் கட்டுமானத் தொழில்களுக்கான சாத்தியக் கூறுகளை ஏற்படுத்தி திருகோணமலை துறைமுகப் பகுதியில் முதலீட்டு வாய்ப்பு களை முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# திருவாசகம் முற்றோதல் 31.12.2023 ஈழத்துச் சிதம்பரம் மாணிக்க வாசகர் மடாலயத்தில் 2024 இல் அருள்மிகு ஈழத்துச் சிதம்பரம் ஆலயம் புனருத்தாரணம் பூர்த்தியாகி 'கும்பாபிஷேகம்' காண்போம்'ஓம் திண்ணபுரச் சிவ'-'ஓம் ஆத்ம நாதா'



**"வேண்டத்தக்கது அறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ"**

உயிர்கள் விரும்புகின்றவற்றை அறிபவன் நீயே,அவ்வுயிர்கள் இரந்து வேண்ட அவற்றையும் தருபவனும் நீயே. **அன்றைய ஆலயங்கள் சிறந்த அறநெறி கல்விக் கூடங்களாகவும் நீதிமன்றமாகவும் கலைக் கூடங்களாகவும் தர்ம நிலையங்களாகவும் இருந்தது.** இன்று ஆல்யங்கள் மூடிக்கட்ட ப்பட்டு நீதி மன்றங்களில் அல்லல்படுகின்றன.

சித்தாந்த விழுப்பொருள்கள் செறிந்து விளங்கும் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டும், நம்மபவர் நால்வர், அருளாளர்கள் மூலமாக தேவார திருவாசகம் திருமுறைத் திருப்பதிகங்களை நாளும் ஓதி உய்வு பெற வேண்டுவது ஒவ்வொருவரது கடமையாகும்.

**"கயல் மாண்ட கண்ணிதன் பங்கன்**
**எனைக் கலந்தாண்டலுமே அயல் மாண்டரு**
**வினை சுற்றமுமாண்டு அவனியின் மேல்"**

கயல் மீன் போன்ற சிறந்த கண்களையுடைய உமாதேவியைப் பக்கத்தில் உடையவன் என்னைக் கலந்து ஆண்டு அருளினான். **இறைவன் திருநாமம் அன்றிப் பிறவற்றைப் பேசும் பயனற்ற சொற்கள் நீங்கியது ஓதுவோம் திருவாசகம்.**

**"புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனை**
**கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமைப் பாடிப்போய்"**

ஆண்டாள் திருப்பாவை-13

பொல்லா அரக்க மனத்தாரை களைந்த அரனின் புகழை பாடிப்போய் சிவனே என நாமம் சொல்லி திண்ணபுரச் சிவன், கூத்தன், ஆண்டி ஐயனார், சோமாஸ்கந்தர் பரிவார மூர்த்திகளினதும், **கோபுரக்குட முழுக்கும் கும்பாபிஷேகம் கண்டவர்கள் பாக்கிய சாலிகளே.** நமக்கு மட்டு மல்ல காரை மக்கள் சிவ பூமியாகிய தீவுக்கும் **பெரும் சாந்தி** கிடைப்பதற்கும் நாம் எல்லோரும் **திருமுறைகளை ஆலயங்களிலும், இல்லங்களிலும், உள்ளங்களிலும் ஒலிக்குமாறு செய்வது சிறந்த சிவப் பணியாகும்.**



**"ஓம் திண்ணபுரச்சிவ"**
**தை பிறந்தால் வழி பிறக்கும்**

சைவமக்களாகிய நாங்கள் சிவநெறி, அறநெறி அன்பு நெறி, சைவ நெறியிலும் வாழ்ந்து திருமுறை களை ஓதி நாமும் **ஏமாறாமல் மற்றவர்களையும் ஏமாற்றாமல்** இறைவன் திருவடி பாடிப் பணிந்து இணைவோம்.



**க.கு.க.சிவபாலன்** (K.K.K)
**காரைநகர்**
**மாணிக்கவாசகர் மடாலயம்.**
**காப்பாளர்.**

# இராசிபலன்

30.12.2023
மார்கழி 14, சனிக்கிழமை
திருதியை முற்பகல் 9.49 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 5.57 மணிவரை

சுபநேரம் -3.29-4.59 மணிவரை
இராகுகாலம்-9.29-10.59 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்
பூராடம்.

**வளவன்**




அழகுசாதனப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




வங்கிச் சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்,உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணை புரிவர், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும்.




நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், போசன சுகமுண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு,சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும்.




விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்,கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்,போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.




எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்,சுபகாரியச் செலவுகள் கூடும்.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்,பொது வழியில் மதிப்பும் மரியாதையும் உயரும்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும்,இல்லத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு,வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள்.




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், விருந்தினர் வருகையுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு,வழிபாட்டால் பெருமை காணவேண்டிய நாள்.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது,தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்,மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.




பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்,வருமானம் திருப்தி தரும்.




கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள்,தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், கௌரவமான நாள்.




திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் பெருக வழிமைத்துக் கொள்வீர்கள்,வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**நேர்மைக்கு பலன் கிடைக்கும். ஆனால் நெடுநாள் காத்திருக்க வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு தொற்றால் அதிகரிக்கும் இறப்பு வீதம்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தொடரும் அசாதாரணமான மழை வீழ்ச்சியே டெங்குத் தொற்றின் தாக்கம் அதிகரிப்பதற்கு காரணம் என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் டெங்கு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை சிறிய நீர் உள்ள இடங்களிலும் டெங்கு நுளம்பு பெருகும் நிலை காணப்படுகின்றது. கடந்த இரண்டு மாதங்களிலேயே தாக்கம் அதிகரித்துள்ளது.

மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதால் கண்காணிப்பதில் சற்று சிரமநிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மரணவீதம் அதிகரித்துள்ளது. குறிப்பாக டிசெம்பர் மாதத்தில் மட்டும் டெங்கு தொற்றால் நால்வர் பலியாகியுள்ளனர்.

மேலும் போதனாவிலும் மற்றும் நான்கு பிரதேச மருத்துவமனைகளிலும் இதற்கான சிகிச்சைக்கான அனைத்து வசதிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

போதனாவில் இரு விடுதிகள் இதற்காக பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதனை கண் காணிப்பதற்காக 60 மருத்துவ மற்றும் பராமரிப்பு ஊழியர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை டெங்கு உதவியாளர்களிற்கு பற்றாக்குறை நிலவுகின்றது. இதனை நிவர்த்திசெய்ய பணியாளர்களாக பயிற்சி பெற்ற 53 பேரையும் நிரந்தரமாக்குவதனூடாக ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும் என தெரிவித்தார். (நி-5-6-33)

# கில்மிஷாவை நேரில் சென்று வாழ்த்து தெரிவித்த சிறீதரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

சரிகமப போட்டியில் வெற்றி பெற்ற கில்மிஷாவை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று நேரில் சென்று வாழ்த்தி கௌரவித்தார்.

இந்திய தனியார் தொலைக்காட்சியின் சரிகமப இசைநிகழ்வில் வெற்றியாளராக முடிசூடி நேற்று முன்தினம் யாழ்.வந்தடைந்த கில்மிஷாவை, அரியாலையில் உள்ள வீட்டிற்கு சிறீதரன் நேரில் சென்று வாழ்த்தி கௌரவித் தார். (நி-5-6-33)

# கலைவிழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம், மத்திய சனசமூக நிலையம், மத்திய முன்பள்ளியின் கலைவிழா இன்று பிற்பகல் 1 மணிக்கு கோண்டாவில் தில்லையம்பதி திருக்கோயில் திருமண மண்டபத்தில் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் கலாநிதி சின்னத்தம்பி அனந்தராசா தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

# மாணவர்களுக்கு 'மாவா' விற்ற நபர் கைது

## சுமார் 7 கிலோ போதைப்பாக்கு மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் மாணவர்களுக்கு போதைப்பாக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்வியங்காடு பகுதியில் இளைஞன் ஒருவர் மாணவர்களுக்கு மாவா போதைப்பாக்கு விற்பனை செய்வதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இளைஞனை கைது செய்தனர்.

கைது செய்த இளைஞனை சோதனையிட்டபோது, அவரது உடைமையில் இருந்து, சுமார் 7 கிலோ மாவா பாக்கினை மீட்டுள்ளனர்.

கைதான இளைஞனை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-33)

# "மக்களுக்காக நாம்" டெங்கு விழிப்புணர்வு செயற்றிட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.ஊடக அமையத்தின் "மக்களுக்காக நாம்" செயற்றிட்டத்தின் கீழ் டெங்கு விழிப்புணர்வு செயற்றிட்டம் நேற்று காலை யாழ்.போதனா மருத்துவமனையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலில் பரவல் தீவிரமடைந்துள்ளதை கருத்தில் கொண்டு யாழ்.ஊடக அமையத்தின் சமூக பணிகளுக்கான "மக்களுக்காக நாம்" செயற்றிட்டத்தின் ஊடாக இந்த விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போதனா மற்றும் யாழ். மத்திய பேருந்து நிலையம், வர்த்தக நிலைய தொகுதி ஆகியவற்றில் விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் இந்த விழிப்புணர்வு செயற்றிட்டம் தொடர்ந்து ஒரு வாரத்திற்கு டெங்கு அபாய வலயங்களில் முன்னெடுக்கப்படவுள்ளது. (நி-5-6-33)

# கல்வியங்காடு பகுதியில் விஜயகாந்திற்கு அஞ்சலி




(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு அருகில் கண்ணீர் அஞ்சலி பதாகைகள் கட்டப்பட்டு விஜயகாந்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தே.மு.தி.க தலைவரும் தென்னிந்திய திரையுலக பிரபல நடிகருமான விஜயகாந் உடல் நலக் குறைவு காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் காலமானார்.

அதேவேளை பொன்னாலை, மூளாய் பகுதிகளிலும் விஜயகாந் ரசிகர்களால் கண்ணீர் அஞ்சலி பதாகைகள் கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் கொள்கலன் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட டெங்கு பெருகும் அபாயம் உள்ள பிரதேசம் முழுவதும் கொள்கலன் சேகரிப்பில் இன்று மாநகரசபையின் சகல கழிவகற்றும் உழவியந்திரங்களும் ஈடுபடவுள்ளன.

எனவே யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஜே/82, ஜே/68, ஜே/98, ஜே/88, ஜே/80, ஜே/69, ஜே/99, ஜே/84, ஜே/74, ஜே/66, ஜே/109, ஜே/91, ஜே/76, ஜே/65, ஜே/108, ஜே/95 உள்ளிட்ட கிராம சேவகர் பிரிவுகளில் இடம்பெறவுள்ளன என யாழ். மாநகர சபையின் ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# வடமராட்சியில் இரண்டு படகுகள் தீயிட்டு எரிப்பு

## ரூ.14 இலட்சம் பெறுமதியான வலைகள் நாசம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கு கேவில் கடற்றொழிலாளர்கள் சங்கத்திற்கு உட்பட்ட இரண்டு மீனவர்களுக்கு சொந்தமான இரண்டு படகுகள் மற்றும் ரூபா 14 இலட்சம் பெறுமதியான வலைகள் விசமிகள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு கேவில் பாலையடி மேற்கு களப்பில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸாரிடம் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழர் பேரவையின் 'இமாலய பிரகடனம்'

## இலங்கையின் யுத்த குற்றவாளிகளை காப்பாற்றும் யோசனை

### கனடா பிரம்டன் மேயர் கடும் கண்டனம்



(ஒட்டாவா)

**உலகத் தமிழ்ப்பேரவையும் கனேடிய தமிழ் காங்கிரசும் தமிழ் மக்களின் அபிலாசைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் இலங்கையின் யுத்த குற்றவாளிகளை காப்பாற்றும் யோசனையொன்றை சமர்ப்பித்துள்ளதாக கனடாவின் பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன் தெரிவித்துள்ளார்**

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலையிலிருந்து தமிழர்கள் தப்பியோடிவந்துள்ளனர்.

2009 இல் இனப்படுகொலை உச்சக்கட்டத்தை அடைந்த காலம் முதல் தமிழ் மக்களிற்கு இழைக்கப்பட்ட மிகவும் கொடூரமான குற்றங்களிற்காக நீதியும் பொறுப்புக்கூறலும் அவசியம் என நான் வலியுறுத்தி வந்துள்ளேன்.

இலங்கையில் நீதி பொறுப்புக்கூறல் இன்றி அமைதி சமாதானம் சாத்தியமில்லை.

ஐக்கியநாடுகள்மனித உரிமை பேரவை ஆதாரங்களை சேகரித்து வருவதுடன் இலங்கையின் யுத்த குற்றவாளிகளிற்கு எதிரான விசாரணைகள் உட்பட சாத்தியமான மூலோபாயங்களை முன்வைக்கவுள்ளது.


கனடாவின் பிரம்டன்நகரமும் கனடாவின் அனைத்து நிர்வாகங்களும் தமிழர்கள் இனப்படுகொலைக்குள்ளானார்கள் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளன.

எனினும் உலகதமிழர் பேரவை கனேடிய தமிழ் காங்கிரசின் ஆலோசனை குழுவின்உறுப்பினர் ஒருவருடன் இணைந்து தமிழ் மக்களின் அபிலாசைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் இலங்கையின் யுத்த குற்றவாளிகளை காப்பாற்றும் யோசனையொன்றை சமர்ப்பித்துள்ளனர்.

இது நீதி பொறுப்புக்கூறல் என்ற இலக்கில் ஒரு அடி பின்னோக்கிய நடவடிக்கையாகும்.

தமிழ் மக்களிற்கு எதிரான மிகமோசமான குற்றங்களிற்காக கனடாவில் தடை செய்யப்பட்டுள்ள யுத்த குற்றவாளியும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவுடன் கனேடிய தமிழ் காங்கிரஸ் உறுப்பினர் படமெடுத்துக் கொண்டமை அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

உலகத்தமிழர் பேரவை கனேடிய தமிழ் காங்கிரசின் இந்த நடவடிக்கைகளை நான் கடுமையாக கண்டிக்கின்றேன். கனேடிய தமிழ் அமைப்புகளும் கனடா அரசாங்கமும் தமிழ் மக்களின் நீதி பொறுப்புக்கூறலிற்கு தீர்வை காண்பதில் உரிய தார்மீக நிலைப்பாட்டை தெரிவு செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றேன். (நி-5-6)



## தேர்தலை ஒத்திவைக்க முற்பட்டால் கொழும்பில் மீண்டும் கலவரம் வெடிக்கும்

### அரசை மிரட்டும் மேர்வின் சில்வா

(கொழும்பு)

தேர்தலை ஒத்திவைப்பதற்கு ஆட்சியாளர்கள் முற்பட்டால் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நடந்த கதியே ஆட்சியாளர்களுக்கும் நடக்கும் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என நம்புகின்றோம். அவ்வாறு இல்லாவிட்டால் அதற்கு எம்மிடம் பதில் உள்ளது.

10 லட்சம்பேரை கொழும்பில் களமிறங்குமாறு இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தேன்.

எனவே, தேர்தல் நடத்தப்படாவிட்டால் லட்சக்கணக்கான மக்கள் கொழும்பு வர வேண்டும். தேர்தலை நடத்தாமல் இருக்கும் ஏகாதிபத்திய தலைவர்களையும் அவர்களுக்கு உதவுபவர்களையும் கோட்டாபய ராஜபக்ஷவைபோல் நாட்டில் இருந்து வெளியேற்ற வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5-6)


மணி விழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

திருமதி. சத்தியவதி இரவிக்குமார் (SLTS-I)

ஆசிரியர்-விஞ்ஞானம் (பயிற்றப்பட்ட)




**சேவை விபரம்**

யா/சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்
06.04.1988- 31.12.1989
யா/பாலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசலை
01.01.1990- 31.12.1991
யா/சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம்
01.01.1992- 31.01.1992
யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்
01.02.1992- 09.06.1997
யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்
10.06.1997- 31.06.2002
யா/மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்
01.07.2002- 01.02.2015
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
02.02.2015- 29.12.2023

அறிவின் திருவால் அன்பின் உருவாய்
மாணவர் மனங்களில் மந்திர மவுசாய்
வருந்திய முயற்சி பலித்திடக் கண்டு
உவகை கொண்டு உழைத்த உத்தம
குருவே வாழ்க பல்லாண்டு வாழ்க
மணிவிழாக் காணும் அன்புக் கடலே
என்றும் நிறைவாய் வாழ வாழ்க
என்று வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்- சேவையாளர் சங்கம்,
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

(18421)



மணிவிழா நாயகனுக்கு 60 ஆவது பிறந்த நாள் வாழ்த்துகள்



நல்லதொரு அதிபராக
நம் பள்ளியின் பெருமை காத்த
கிழக்கின் சூரியரே...!!
சீர் பெற்று நீர் விளங்க
சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்
அகவை அறுபதிலே மணிவிழாக் கண்டு
அகவை நூறிலே நூற்றாண்டு காண
உளமார வாழ்த்துகின்றோம்.

அதிபர்

திரு.சுப்ரமணியம் ரவீந்திரன்

| பதவிக்காலம் | காலம் | கடமை |
|---|---|---|
| யா/அரியாலை கிழக்கு அ.த.க பாடசாலை | 17.08.1988 - 04.02.1991 | - ஆசிரியர் |
| யா/ கோப்பாய் அரசினர் கலாசாலை | 05.02.1991 - 31.12.1992 | - ஆசிரிய மாணவன் |
| யா/அரியாலை கிழக்கு அ.த.க பாடசாலை | 01.01.1993 - 02.05.1993 | - ஆசிரியர் |
| கிளி/சென் பற்றிமா றோ.க.த.க பாடசாலை | 03.05.1993 - 05.10.1993 | - ஆசிரியர் |
| கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலை | 06.10.1993 - 14.06.1994 | - ஆசிரியர் |
| கிளி/கல்மடுநகர் அ.த.க பாடசாலை | 15.06.1994 - 03.08.2000 | - கடமை நிறைவேற்று அதிபர் |
| கிளி/கல்லாறு தமிழ் வித்தியாலயம் | 04.08.2000 - 09.01.2007 | - அதிபர் |
| கிளி/றோ.க.த.க பாடசாலை | 10.01.2007 - 01.11.2011 | - அதிபர் |
| கிளி/நாகேந்திரா அ.த.க பாடசாலை | 02.11.2011 - 03.01.2016 | - அதிபர் |
| கிளி/இராமநாதபுரம் கிழக்கு ம.வி | 04.01.2016 - 30.12.2023 | - அதிபர் |

(C-8047)


வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிச்சங்கம், கிளி/ இராமநாதபுரம் கிழக்கு ம.வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# 24 மணித்தியாலயத்தில் இந்தி

# 702 பேருக்கு கொரோனா, 6 பே



(டில்லி)

**இந்தியாவில் 24 மணித்தியாலத்தில் 72 பேருக் வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாகவும் கொ பாதிக்கப்பட்ட ஆறு பேர் உயிரிழந்துள்ளதா சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.**

24 மணி நேரத்தில் மகாராஷ்டிரா, கர்நாடகா, கேரளா, மேற்குவங்கம், டில்லி ஆகிய பகுதிகளில் கொரோனாவால் உயிர் பலியாகியுள்ளது என்றும் J.N-1 கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் புதிய கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின்ரத்தம் புனேவில் உள்ள தேசிய வைராலஜி ஆய்வகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அது குறித்து அறிக்கை வந்த பிறகு சில முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது

இந்தியாவில் கொரோனா

## செங்கடலில் ஹவுதி அமைப்பினரால் தாக்கப்பட்ட சரக்கு கப்பல்




(சனா)

செங்கடல் வழியாக பயணித்த மற்றுமொரு கப்பல் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி செங்கடல் வழியாகப்பயணித்த சுவிஸ் கப்பல் ஒன்றின் மீதே இந்த ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவிலிருந்து பாகிஸ்தான் நோக்கி சரக்குகளை ஏற்றிச் சென்ற சுவிஸ் கப்பல் நிறுவனமான MSC இற்கு சொந்தமான சரக்குக் கப்பல் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஏமனைதளமாகக்கொண்ட ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர்களான ஹவுதி அமைப்பினர் செங்கடலில் பயணிக்கும் கப்பல்கள் மீது அவ்வப்போது ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர்.


தற்போது, சுவிஸ் சரக்குக் கப்பலொன்றின் மீதும் ஹவுதி அமைப்பினர் ஏவுகணைத் தாக்குதலினை நடத்தியுள்ளார்கள்.

அதிஷ்டவசமாக கப்பலில் பயணித்த பணியாளர்கள் யாருக்கும் எந்த ஆபத்தும் ஏற்படவில்லை என MSC நிறுவனம் தெரிவித்துள்ளது.

செங்கடலில் பயணிக்கும் கப்பல்கள் ஹவுதி அமைப்பால் தாக்கப்பட்டுவரும் நிலையில், இரண்டு வாரங்களுக்கு முன், இனி செங்கடல் வழியாக பயணிப்பது ஆபத்து என்பதால் அந்த வழியாக அனைத்து பயணங்களையும் நிறுத்துவதாக MSC நிறுவனம் அறிவித்திருந்தது.

அப்படியிருக்கையில், மீண்டும் அந்த கப்பல் செங்கடல் பயணித்ததற்கான காரணம் புதிராக இருப்பதாக அனைவரும் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## ஏவிய சில நி வெடித்து சிதறிய



(பீஜிங்)

சீனாவில் விண்ணிற்கு ஏவப்பட்ட ராக்கெட் சில நிமிடங் களில் கீழே விழுந்து வெடித்து சிதறிய சம்பவம் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

## தொலைபேசியிலிருந்து நீக்கப்பட்ட செயலிகளில் இன்ஸ்டாகிராம் முதலிடம்

(வோஷிங்டன்)

இந்த வருடம் கையடக்க தொலைபேசிகளிலிருந்து நீக்கப்பட்ட செயலிகள் பட்டியலில் இன்ஸ்டாகிராம் முதலிடம் பிடித்துள்ளது.

அமெரிக்காவின் TRG Data center வெளியிட்டுள்ள பட்டியலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், உலகம் முழுவதும் ஒவ்வொரு மாதமும் பத்து இலட்சத்திற்கும் அதிக மானவர்கள் 'இன்ஸ்டா கிராம் கணக்கை அழிப்பது எப்படி' என இணையதளத்தில் தேடியுள்ளதாகவும் குறித்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

அத்துடன் குறித்த பட்டியலில் சினாப்சாட், டெலிகிராம், பேஸ்புக், ட்விட்டர், யூடியூப், வாட்ஸ்அப் ஆகிய செயலிகளும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## நெதன்யாகு ஹி

### துருக்கி ஜனாதி

(அங்காரா)

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஹிட்லரிலிருந்து வேறுபட்டவர் அல்ல என துருக்கி ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

அங்காராவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே துருக்கி ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காசா மீதான இஸ்ரேலின் தொடர்ச்சியான தாக்குதல்களும், பாலஸ்தீன பொதுமக்களை அப்பட்டமாக கொன்று குவிப்பதும், யூத மக்களை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...யாவில் ...பேர் பலி

...ருக்கு கொரோனா ...கொரோனாவால் ...தாகவும் மத்திய

...மக் ...யும் ...னா

வைரஸ் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அடுத்து பொதுமக்கள் முகக்கவசத்தை அணியுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (நி-5-6)

## பனிப்பொழிவு நிலவும் பகுதிகளில் பயணிப்பது அபாயகரமானது

### கனடா மக்களுக்கு எச்சரிக்கை



(ஒட்டாவா)

பனிப்பொழிவு நிலவும் பகுதிகளில் பயணம் செய்வது அபாயகரமானது என கனடாவில் அல்பர்ட்டா மாகாண மக்களுக்கு அவசர எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பனி படர்ந்திருந்த நீர்நிலையொன்றில் வீழ்ந்து மூழ்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்திருந்தனர்.

நத்தார் பண்டிகைக்கு முன்னர் காணாமல் போயிருந்தவர்களே இவ்வாறு சடலங்காக மீட்கப்பட்டிருந்தனர்.

பனிப்பொழிவுடன் காணப்படும் நீர் நிலைகளில், வாகனங்களை செலுத்துவது அபாயகரமானது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## காசாவில் பணப்பரிமாற்ற நிலையங்களை குறிவைத்து தாக்கும் இஸ்ரேல்

(காசா)

காசாவின் மத்திய பகுதியில், தொடர்ந்தும் இஸ்ரேல் வான் வழித்தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில், காசாவின் பணப்பரிமாற்ற நிலையங்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல்களை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தாக்குதல் நடத்திய போது, பணப்பரிமாற்ற நிலையங்களில் இருந்து சுமார் 2.5 மில்லியன் டொலர்களை இஸ்ரேலிய படைகள் கைப்பற்றியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலின் தாக்குதலினால் காசாவை விட்டு அதிகமான மக்கள் வெளியேறி வருவதாக உலக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5-6)



## ...நிமிடங்களில் ...ய சீன ரொக்கெட்



...ந்து ...யம் ...து.

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் உள்ள ஜிசாங் செயற்கைக் கோள் ஏவுதளத்தில் இருந்து லாங் மார்ச்-11 கேரியர் ரொக்கெட் விண்ணில் ஏவப்பட்டது.

லாங் மார்ச்-11 ரொக்கெட் 20.8 மீற்றர் நீளமும் 2 மீற்றர் விட்டமும் 58 மெற்றிக்தொன் எடையும் கொண்டது.

இது குறைந்த புவி சுற்றுப்பாதை அல்லது சூரிய-ஒத்திசைவு சுற்றுப் பாதைக்கு செயற்கைக் கோள்களை கொண்டு செல்லும் திறன் கொண்டது.

விண்ணில் சீறிப்பாய்ந்து சென்ற லாங் மார்ச்-11 ரொக்கெட்டில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு திசை மாறி விண்ணில் இருந்து பூமியை நோக்கி வந்தது.

ரொக்கெட்டின் பூஸ்டர்கள், அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் விழுந்து வெடித்து சிதறியது. இதனால் அங்கு தீப்பிழம்பு ஏற்பட்டுள்ளது.

விபத்துக்கான காரணங்கள் தொடர்பில் விஞ்ஞானிகள் ஆய்வினை மேற்கொண்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## புத்தாண்டுக்கு பட்டாசு வெடிக்க சார்ஜாவில் தடை விதிப்பு

(சார்ஜா)

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் சார்ஜாவில் புத்தாண்டுக்கு பட்டாசு வெடிக்க தடை விதிக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த செவ் வாய்க்கிழமை பொலிஸார் அறிவிப்பு விடுத்துள்ளனர். விதியை மீறுபவர்களுக்கு எதி ராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படும், அனைத்து நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண் டும்.

இது போரினால் பாதிக்கப்பட்ட காஸாவிலுள்ள பாலஸ்தீனியர்களுக்கு ஒற்றுமையை வெளிப்படுத்த எடுக்கப்பட்ட தீர்மானம் என பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

காஸா பகுதியில் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே போர் நடந்து வரும் நிலையில் 20,000 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் எழுபது சதவீதம் பேர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என நம்பப்படுகிறது.

இதேவேளை, ஹமாஸை அழிக்கும் வரை "அமைதி இருக்காது" என்று இஸ்ரேல் அண்மையில் கூறியதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

யுத்த நிறுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் இஸ்ரேல் இராணுவம் காசாவின் தென் பகுதியில் தொடர் தாக்குதலை நடத்தி வருகிறது.

முற்றுகையிடப்பட்ட பிரதேசத்தினுள் மனிதாபிமான நெருக்கடிகள் காரணமாக யுத்த நிறுத்தத்திற்கான அழைப்புகள் அதிகரித்துள்ளன.

காஸாவில் இதுவரை 2.4 மில்லியன் மக்கள் தண்ணீர், உணவு, எரிபொருள் மற்றும் மருந்து பற்றாக் குறையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறைந்த அளவிலான உதவிகள் மட்டுமே எல்லைக்குள் செல்கின்றன. 1.9 மில்லியன் காஸா மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. (நி-6)

## ...ஹிட்லருக்கு சமன்

### ...திபதி விமர்சனம்

...ன்டு ...க்கி ...று ...ாட ...ஸ் ...ாக ...ளை

கொன்ற ஹிட்லரின் கொடூரமான கொலைக்கு சமம் என்று எர்டோகன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஹமாஸ் அமைப்பினரைக் குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதல்களால் காசா பகுதியில் பாலஸ்தீன குழந்தைகள் மற்றும் பெண்கள் உயிரிழந்ததை சகித்துக் கொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இஸ்ரேலின் போருக்கு மத்தியில் காசாவில் மோதல்கள் குறித்த கருத்துக்களை [illegible] க்கு உள்ளான [illegible] கள் மற்றும் விஞ்ஞானிகளை வரவேற்க துருக்கி தயாராக உள்ளது எனக் குறிப்பிட்டார்.

போருக்குப் பின்னர் காசாவின் ஆட்சி மற்றும் எதிர்காலம் பாலஸ்தீனியர்களால் மட்டுமே தீர்மானிக்கப்படும் என்றும் வேறு யாராலும் தீர்மானிக்க முடியாது எனவும் இதேவேளை இஸ்ரேல் பாலஸ்தீனியர்களுடன் அமைதியான எதிர்காலத்தை எவ்வாறு உருவாக்குவது என்று சிந்திக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (நி-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

### விசாகம் 4 ஆம் பாதம் நீண்டநாள் எண்ணம் நிறைவேறும்

தனகாரகனான குருவின் நட்சத்திரத்தில் பிறந்திருந்தாலும் 1,2,3 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு களத்திரக்காரகனான சுக்கிரன் ராசிநாதனாகவும், 4 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு சகோதரகாரகனான செவ்வாய் ராசிநாதனாகவும் உள்ளனர். கோச்சார ரீதியாக சனிபகவான் சஞ்சரிக்கும் காலங்களில் பலன்களை அவரவர் கர்ம வினைக்கேற்ப தரக்கூடியவராகிறார்.

விசாகம் 1,2,3 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு சனிபகவான் 5 ஆம் இடத்திலும், 4 ஆம் பாதத்தினருக்கு 4 ஆம் இடத்திலும் சஞ்சரிக்கிறார். இதனால் 4 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு அலைச்சல், இழுபறி, தாயாரின் உடல் நிலை யில் பாதிப்பு, மனரீதியாக நெருக்கடி, வீண் விரோதம், ஊர்விட்டு ஊர் செல்லும் நிலையை ஏற்படுத்தலாம் என்பது பொதுப்பலன்.

**அதிர்ஷ்ட காலம்**

சனி பகவான் அவிட்டம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான டிச 20.2023 - பெப் 15.2024 வரையிலும், சதயம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச்16.2024 - ஜுன்19.2024 மற்றும் நவ 4.2024 - பெப் 27.2025 வரையிலும் தாரா பலனாலும், அஸ்தமன, வக்கிர காலங்களிலும் 4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களையும் ·சங்கடங்களில் இருந்து பாதுகாப்பார். முயற்சிகளை வெற்றியாக்குவார். பணவரவில் இருந்த தடைகளை அகற்றுவார். யோகமான பலன்களை வழங்கி முன்னேற்றத்தை உண்டாக்குவார்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26.2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில், 4 ஆம் பாதத்தினருக்கு 11 ஆம் இட கேதுவால் தொட்டதெல்லாம் வெற்றியாகும். பட்டம், பதவி, செல்வாக்கு என்று அதிகரிப்பார்.

**குரு சஞ்சாரம்**

4 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு மே 1.2024 - மே 13.2025 வரை நினைத்த காரியங்களில் வெற்றியையும் குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளையும் வேலை தேடுபவர்களுக்கு தகுதியான வேலை யையும் இளம் வயதினருக்கு திருமண யோகத்தையும் உண்டாக்குவார். பண வரவை அதிகரிப்பார். குடும்பத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவார்.

**பொதுப்பலன்**

சனி பகவானின் சஞ்சாரம் சாதகமாக இல்லை என்றாலும் ராகு, கேது, குரு பகவானின் சஞ்சாரங்கள் உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும். வாழ்க்கையில் முன்னேற்றத்தை உண்டாக்கும். சங்கடங்களில் இருந்து உங்களை விடுவிக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயத்தை ஏற்படுத்தும். பொன், பொருள், பூமி, வாகன சேர்க்கை ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றியை ஏற்படுத்தும்.

**தொழில்**

தொழிலில் போட்டி, பிரச்சினைகள் என்று இருந்தாலும் அதை சமாளித்து வெற்றி பெறுவீர்கள். வருமானம் தரும் தொழில்களை கண்டறிந்து அதில் உங்கள் முயற்சியை மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சிகள் லாபமாகும். மற்றவர்களால் சங்கடங்கள் ஏற்படும் என்பதால் இக்காலத்தில் உங்களை மட்டுமே நம்பி நடத்தப்படும் தொழில் ஆதாயத்தை அளிக்கும்.

**கல்வி**

படிப்பில் சில தடைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. மற்ற விடயங்களில் கவனம் செலுத்தாமல் ஆசிரியர்களின் ஆலோசனைகளை கேட்டு செயற்பட்டால் தேர்வில் உங்கள் முயற்சி வெற்றியாகும். எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்கும். விரும்பிய கல்லூரி யில் நினைத்த பாடத்தில் சேரும் வாய்ப்பு ண்டாகும்.

பரிகாரம் முருகனை வழிபட வாழ்வு வளமாகும். நாளும் நலம் சேரும்.

### அனுஷம் எதிர்பார்ப்பு நிறைவேறும்

ஆயுள்காரகனான சனிபகவானை நட்சத்திர நாதனாகவும் சகோதரகாரனான செவ்வாய் பகவானை ராசிநாதனாகவும் கொண்டு பிறந்த உங்களுக்கு டிச.20. 2023 முதல் சுகஸ்தானமான 4 ஆம் இடத்தில் அர்த்தாஷ்டமச் சனியாக சஞ்சரிக்கப் போகிறார் சனிபகவான்.

சனிபகவான் உங்கள் நட்சத்திர நாதன் என்றாலும் உங்கள் ராசிநாதனுக்கு அவர் பகையானவர். கோச்சார ரீதியாக அவர் எந்த இடத்தில் சஞ்சரிக்கிறாரோ அந்த இடத்திற்குரிய பலன்களை ஒவ்வொருவரின் கர்ம வினைக்கேற்ப வழங்கக் கூடியவர்.

4 ஆம் வீடான சுக ஸ்தானத்தில் அர்த்தாஷ்டமச் சனியாக சஞ்சரிக்கும் காலத்தில் குடும்பத்தில் வீண் விரோதத்தை உண்டாக்குவார். பலவழிகளிலும் உங்களை அலைக்கழிப்பார். உடல் நிலையிலும் பாதிப்பு ஏற்படும். அதன் காரணமாக மனக்கவலையை அதிகரிப்பார். சிலருக்கு தாயுடனும் தாய் வழி உறவுகளுடனும் விரோதம் ஏற்படலாம். வீடு, சொத்து, வாகனத்தால் தொல்லைகளும் உற்றார், உறவினர்களுடன் பகையும் ஏற்படுவதுடன், தொழிலிலும், பணியிலும் சங்கடம், நஷ்டம், பிரச்சினைகள் என்று உண்டாகும். என்றாலும் இது பொதுவான விதிதான். சுய ஜாதகத்தில் கிரகங்கள் அமைந்துள்ள நிலையை வைத்தும் திசா புத்தியின் அடிப்படையிலும் மற்ற கிரகங்களின் சஞ்சார நிலைகளாலும் பலன்களில் மாறுதல் உண்டாகலாம்.

**அதிர்ஷ்ட காலம்**

சதயம் நட்சத்திரத்தில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16.2024 - ஜுன் 19.2024 வரையிலும் நவ 4.2024 - பெப் 27.2025 வரையிலும், பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 29.2025 - ஜுலை 2.2025 வரையிலும், நவ 17.2025 - மார்ச் 6.2006 வரையிலும் தாரா பலனாலும், அஸ்தமனம், வக்கிர காலங்களிலும் அர்த்தாஷ்டம சனியின் பாதிப்பில் இருந்து உங்களுக்கு விடுதலை உண்டாகும். வழக்கமான முயற்சிகள் தடை இல்லாமல் நிறைவேறும். திட்டமிட்ட காரியங்களில் லாபம் உண்டாகும். பிரச்சினைகளை எல்லாம் சமாளிக்கும் சக்தி ஏற்படும். நீங்களே எதிர்பார்க்காத அதிர்ஷ்ட வாய்ப்புகள் கிடைக்கும்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26.2025 வரை ராகு மீனத்திலும், கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் லாப ஸ்தான கேதுவால் இதுநாள் வரையில் உங்களுக்கிருந்த நெருக்கடிகள் காணாமல் போகும். உங்கள் முயற்சி யாவும் வெற்றியாகும். தொழிலில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். வீடு, வாகனம், பொன், பொருள், அந்தஸ்து ஆகியவற்றை அடைவீர்கள். ஏப் 26.2025 முதல் ராகு கும்பத்திலும், கேது சிம்மத்திலும் சஞ்சரிக்கும் நிலையில் அலைச்சல் அதிகரிக்கும். உடல் பாதிப்பு உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்காமல் போகும். முயற்சியில் இழுபறி ஏற்படும். குடும்பத்தில் குழப்பம், பிரச்சினை உருவாகி சங்கடத்திற்கு ஆளாக்கும்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30.2024 வரை 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவால் உடல் நிலையில் சில சங்கடம் ஏற்படும். பணவரவிலும் தடை உண்டாகும். எதிர்ப்பு அதிகரிக்கும். இக்காலத்தில் அனைவரிடமும் எச்சரிக்கையுடன் பழகினால் சங்கடத்தில் இருந்து தப்பலாம். மே 1.2024 - மே 13. 2025 காலத்தில் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் செல்வாக்கு உயரும். பணவரவு அதிகரிக்கும். முயற்சி யாவும் வெற்றியாகும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடந்தேறும். அலுவலகத்தில் பிரச்சினைகள் விலகி எதிர்பார்த்த பதவி, ஊதிய உயர்வு கிடைக்கும். மே 14.2025 முதல் அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் தொழிலில் சங்கடம் தோன்றும். செல்வாக்கிற்கு பாதகம் ஏற்படும். உங்களுக்கு நெருக்கமாக இருந்தவர்கள் கூட விலகிச் செல்வர். பொருளாதார ரீதியாக சங்கடம் அதிகரிக்கும். உடல், மனம், தொழில், வாழ்க்கை என எல்லாவற்றிலும் நெருக்கடிகளை சந்திப்பீர்கள்.

**பொதுப்பலன்**

அலைச்சல் அதிகரித்தாலும் உங்கள் முயற்சிகள் லாபமாகும். திட்டமிட்டு செயற்படுவீர்கள். குலதெய்வ அருளால் நன்மை கிடைக்கும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். அரசு வழியிலான முயற்சிகளில் வெற்றி ஏற்படும். நீண்டநாள் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். பொருளாதார ரீதியாக முன்னேற்றம் உண்டாகும். அரசியல்வாதிகள், கலைஞர்களுக்கு இது சுமாரான காலமாக இருக்கும். என்றாலும் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும்.

**தொழில்**

தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். புதிய கிளைகள் தொடங்கி வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். வருமானம் அதிகரிக்கும். முயற்சிகள் வெற்றியாகும். அரசாங்க ரீதியாக எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். ரியல் எஸ்டேட், மெடிக்கல், ஓட்டல், விவசாயம், பில்டர்ஸ், கமிஷன் வியாபாரம், இயந்திர தொழிற்சாலைகள், ஆன்லைன் தொழில்களில் ஆதாயம் அதிகரிக்கும்.




**20.12.2023-06.03.2026**

**பணியாளர்கள்**

பணிபுரியும் இடத்தில் வேலைப்பளு அதிகரிக்கும் என்றாலும் உங்கள் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும். மேலதிகாரிகள், முதலாளிகள் ஆதரவாக இருப்பர். எதிர்பார்ப்புகள் எளிதாக நிறைவேறும். வாழ்வில் புதிய பாதை தெரியும். சிலருக்கு விரும்பிய இட,பணி மாற்றம், பதவி உயர்வும் உண்டாகும்.

**கல்வி**

படிப்பில் அக்கறை அதிகரிக்கும். ஆசிரியர்களின் ஆலோசனைகளை ஏற்பீர்கள். குடும்பத்தினர் ஒத்துழைப்பாக இருப்பர். பொதுதேர்வில், போட்டித் தேர்வில் எதிர்பார்ப்பு நிறைவேறும். விரும்பிய கல்லூரியில் மேற்படிப்பில் இடம் கிடைக்கும்.

பரிகாரம்: சனீஸ்வரருக்கு நல்லெண்ணெய் தானம் செய்து வணங்க சங்கடம் தீரும்.

### கேட்டை எச்சரிக்கை அவசியம்

வித்யாகாரகனான புதன், சகோதர காரகனான செவ்வாயின் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு டிச.20.2023 முதல் 4 ஆம் இடத்தில் அர்த்தாஷ்டமச் சனியாக சஞ்சரிக்கப் போகிறார் சனிபகவான். இவர் உங்கள் ராசிநாதனுக்கு பகையானவர். உங்கள் நட்சத்திர நாதனுக்கு நட்பானவர். சஞ்சரிக்கும் இடத்திற்குரிய பலன்களை அவரவரின் கர்ம வினைக்கேற்ப வழங்கக் கூடியவர்.

4 ஆம் வீடான சுக ஸ்தானத்தில் சனிபகவான் சஞ்சரிக்கும் காலத்தில் பணியில் சங்கடங்கள் உண்டாகும். அலைச்சல் அதிகரிக்கும். குடும்பத்தில் எதிர்பார்த்த நன்மையை அடைய முடியாமல் போகும். ஏதாகிலும் ஒரு பிரச்சினை உண்டாகிக் கொண்டே இருக்கும். அதை சமாளித்து வெளியில் வருவதற்குள் போதும் போதும் என்றாகி விடும். உடல் நிலையிலும் சில சங்கடம் தோன்றும். எடுத்த காரியத்தை முடிக்க முடியாமல் திணறிப் போவீர்கள். இவையெல்லாம் பொதுப் பலன்தான். இப்பலன்களில் உங்களுடைய சுய ஜாதகத்தின் அடிப்படையில் நன்மைகளும் உண்டாகும்.

**அதிர்ஷ்ட காலம்**

சனி பகவான் அவிட்டம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான டிச 20.2023 - பெப் 15.2024 வரையிலும் பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 29.2025 - ஜுலை 2.2025 வரையிலும், நவ 17.2025 - மார்ச் 6. 2026 வரையிலும், அஸ்தமனம், வக்கிர காலங்களிலும் 4 ஆம் இட சனியின் பாதிப்பில் இருந்து விடுபடுவீர்கள். முயற்சிகள் யாவும் வெற்றி பெறும். எதிர்பார்ப்பு நிறைவேறும். நீண்ட நாளாக இருந்த சங்கடங்கள் முடிவிற்கு வரும். பணவரவு அதிகரிக்கும். சிலருக்கு புதிய சொத்து சேர்க்கை ஏற்படும். பணியின் காரணமாக வெளியூரில் வசிக்கும் நிலை சிலருக்கு ஏற்படும். புதிய பொறுப்பு, பதவி கிடைக்கும்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26.2025 வரை ராகு மீனத்திலும், கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் 11 ஆம் இட கேதுவால், உங்கள் வாழ்க்கையில் இருந்த சங்கடங்கள் போகும். நெருக்கடி விலகும். பணவரவு அதிகரிக்கும். வியாபாரம், தொழிலில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும். புதிய பொறுப்பு, பதவி, அந்தஸ்து என எதிர்பார்ப்புகள் நிறைவேறும். ஏப்.26, 2025 முதல் ராகு கும்பத்திலும், கேது சிம்மத்திலும் சஞ்சரிக்கும் நிலையில் எதிர்பாராத சங்கடங்கள் தோன்றும். அலைச்சல் அதிகரிக்கும். முயற்சிகள் இழுபறியாகும். உடல்நலனிலும் பாதிப்பு உண்டாகும். மனதில் சோர்வு ஏற்பட்டு அதனால் உங்கள் செயல்களில் தடைகள் உண்டாகும்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30.2024 வரை 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவால் எதிர்ப்பு அதிகரிக்கும். உடல்நிலையில் சங்கடம் உண்டாகும். வீண் பிரச்சினை உங்களைத் தேடி வரும். மே 1.2024 - மே13.2025 வரையிலும் 7 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவால் எதிர்பார்ப்பு நிறைவேறும். கனவு பூர்த்தியாகும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். முயற்சிகள் யாவும் வெற்றியாகும். அலுவலகத்தில் எதிர்பார்த்த இடமாற்றம், பதவி உயர்வு கிடைக்கும். பொருளாதார நிலை உயரும். மே 14. 2025 முதல் அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் உடல்நிலை, மனநிலை போன்றவற்றில் சங்கடம் அதிகரிக்கும். குடும்பத்தில் நிம்மதி இல்லாத நிலை உருவாகும். வருமானம் தடைபடும். உங்களுடன் இருந்தவர்களே உங்களுக்கு எதிராக மாறுவர். உங்கள் செல்வாக்கிற்கு இது ஒரு சோதனைக் காலம் என்பதால் எச்சரிக்கை அவசியம்.

**பொதுப்பலன்**

உழைப்பு அதிகரித்தாலும் சூழ்நிலையை புரிந்து கொண்டு செயல்படுவீர்கள். உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவீர்கள். குடும்ப நிலையை உயர்த்துவதற்கு முயற்சி செய்வீர்கள். நீண்டநாள் வழக்குகளில் இருந்து விடுபடுவீர்கள். வரவேண்டிய பணம் வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். அரசியல்வாதிகள், கலைஞர்கள் இக்காலத்தில் எதிர்பார்த்த நன்மைகளை அடைவர். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வெளிவட்டாரத்தில் உங்கள் மீது மதிப்பு அதிகரிக்கும்.

**தொழில்**

சுயதொழில் செய்வோரின் முயற்சி வெற்றி பெறும். அரசு வகையில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். வருமானம் உயரும். ஷேர் மார்க்கட்டிங்கில் அதிகளவு ஆதாயம் உண்டாகும். பப்ளிகேஷன், பத்திரப்பதிவு, விவசாயம், இயந்திர நிறுவனங்கள், ஆன்லைன் வியாபாரங்களில் லாபம் அதிகரிக்கும்.

**கல்வி**

படிப்பில் கவனம் செல்லும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். ஆசிரியர்களின் ஆலோசனைகளை ஏற்பீர்கள். அவ்வப்போது நண்பர்களால் கவனம் சிதறும். அதனால் வீண் அரட்டை, ஜாலி என்பதை விட்டு விட்டு தேர்வின் அவசியத்தை உணர்ந்து படிப்பில் கவனம் செலுத்தினால் அதிக மதிப்பெண்கள் பெற முடியும்.

பரிகாரம் நரசிம்மரை வணங்க வாழ்வில் நன்மை அதிகரிக்கும். நிம்மதி நிலைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரிலும் அதிகரிக்கும் டெங்கு

# காய்ச்சல் ஏற்பட்டால் தாமதிக்காது மருத்துவரை நாடுங்கள்



## மருத்துவர் வினோதன் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் விடத்தல் தீவு, பேசாலை பகுதிகளில் அதிகளவான டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தை பொருத்தவரையில் கடந்த ஜனவரி முதல் நவம்பர் வரை 111 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதோடு டிசெம்பர் மாதத்தில் மட்டும் இதுவரையில் 88 நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

டெங்கு காய்ச்சலினுடையதும் குருதிப்பெருக்குடனான காய்ச்சலினுடையதும் ஆரம்ப அறிகுறிகளாக நெற்றி பொட்டை அண்டிய தலையிடி, கண்ணின் பின்புறமான நோவு, சில பேருக்கு தொண்டை நோவு,தசை நோவு சில பேருக்கு வயிற்றில் நோவு போன்ற குணங்குறிகள் காணப்படுமாயின் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுவது கட்டாயமாகும்.(நி-5-6-285)

# மலையகம் 200 நிகழ்வு

(அக்கராயன்)


மலையக மக்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு 200 ஆண்டுகளை நினைவு கூரும் வகையில் கிளிநொச்சியில் மலையகம் 200 நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் இந்திய தனியார் தொலைக்காட்சியான "சீ" தமிழ் தொலைக் காட்சியில் சரிகமப நிகழ்வின் பாடல் போட்டியில் வெற்றி பெற்ற கில்மிஷா மற்றும் அப்போட்டியில் கலந்து கொண்டு சிறப்பாக பாடிய அசானி ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (நி-5-6-350)

# 2 கசிப்பு உற்பத்தி நிலையம் புதுக்குடியிருப்பில் முற்றுகை

## ஒருவர் கைது

## 810 லீற்றர் கோடா,60 லீற்றர் கசிப்பு மீட்பு




புதுக்குடியிருப்பு - இடைக்கட்டு பகுதியில் நேற்று சட்ட விரோத கசிப்பு உற்பத்தி நிலையம் இரண்டு முற்றுகையிடப்பட்டுள்ளதுடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய 810 லீற்றர் கோடாவுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி நிலையம் செயற்படுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் முற்றுகையிடப்பட்டதோடு குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 14 பரல், 810 லீற்றர் கோடா, 60 லீற்றர் கசிப்பினையும் அப்பகுதியை சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (நி-5-6-299)



இந்தியா சீ தமிழ் தொலைக்காட்சியின் சரிகமப பாடல் போட்டியில் வெற்றி பெற்ற கில்மிஷா நேற்று ஆயர் தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை நேரில் சென்று சந்தித்தார். (படம்-சிவசாந்தன்)

# வள்ளிபுனத்தில் விபத்து மாணவி ஒருவர் படுகாயம்

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் துவிச்சக்கர வண்டியில் வீதியினை கடக்க முற்பட்ட மாணவி மீது டிபெண்டர் வாகனம் மோதியதில் மாணவி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற விபத்து சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

பரந்தன் வீதியில் இருந்து முல்லை நோக்கி சென்ற டிபெண்டர் வாகனம் வள்ளிபுனம் பகுதியில் துவிச்சக்கர வண்டியில் வீதியை கடக்க முற்பட்ட வேளை இவ் விபத்து இடம் பெற்றதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



விபத்தில் காயமடைந்த 16 வயதுடைய பாடசாலை மாணவி வள்ளிபுனம் பகுதியை சேர்ந்தவர். இவர் காலில் உடைவு ஏற்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்தினை ஏற்படுத்திய வாகனத்தின் சாரதி புதுக்குடியிருப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்பட இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

# நெடுந்தீவு கடற்பரப்பில் கைதான இந்திய மீனவர்கள் 20 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ். காரைநகர் மற்றும் நெடுந்தீவு கடற்பரப்புகளில் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 20 பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 6ஆம் திகதி நெடுந்தீவில் கைதான 14 மீனவர்களும் டிசெம்பர் 13 ஆம் திகதி காரைநகர் கடற்பரப்பில் கைதான 6 இந்திய மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

குறித்த மீனவர்கள் அனைவரையும் நேற்று வரை(28) விளக்கமறியலில் வைக்குமாறு ஏற்கனவே உத்தரவிடப்பட்டிருந்தது.

இந் நிலையில் நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் குறித்த 20 இந்திய மீனவர்களும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனையுடன் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# 537 பேர் பணிப்பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளில்

## வவு.வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

(குருமன்காடு)

வவுனியாவில் இருந்து 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஊடாக 537 பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளிற்கு வீட்டுப் பணியாளர்களாக சென்றுள்ளதாக வவுனியா மாவட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மாவட்ட இணைப்பாளர் சி.கிருஸ்ணகுமார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாண்டு இதுவரை வவுனியாவில் இருந்து 537 பெண்கள் வீட்டுப் பணியாளர்களாகப் பதிவு செய்து சென்றுள்ளனர்.

இதேவேளை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாமல் பெருமளவு எண்ணிக்கையானோர் தொழிலாளர்களாக மத்திய கிழக்கு நாடுகளிற்கு சென்றுள்ளதாகவும் தெரிவித்தார். (நி-5-6-250)



ஆணையிறவு உப்பளத்தில் நேற்று இடம்பெற்ற நடமாடும் மருத்துவமுகாம். (படம்-தேவானந்தன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் 367





முதலில் கொஞ்சதூரம் ஊர்ப்புறங்களாக இருந்தன. ஓரளவு ஜன நடமாட்டமும் இருந்தது. வர வரக் காட்டுப் பிரதேசமாக மாறி வந்தது. முதலில் குட்டை மரங்கள் நிறைந்த காடாயிருந்தது. பின்னர் வானை அளாவிய பெரிய மரங்கள் அடர்ந்த அரண்யங்களாக மாறின. இடையிடையே ஏரிகள் தென்பட்டன. ஆனால் அவற்றின் கரைகள் பல இடங்களில் இடிந்து கிடந்தன. தண்ணீர் நாலாபுறமும் ஓடிப்போய் ஏரிகள் வறண்டு கிடந்தன. கழனியில் பயிர் செய்யப்படாமல் கிடந்தன. இன்னும் ஓரிடத்தில் விசாலமான பிரதேசத்தில் தண்ணீர் தேங்கியிருந்தது. பாலாவி நதியின் கரை வெட்டப்பட்டபடியால் அதன் தண்ணீர் நதியோடு போகாமல் வெளியில் கண்டபடி சிதறிச் சென்று அப்படித் தண்ணீர்த் தேக்கம் உண்டானதாகத் தெரிந்தது.

இந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்துக்கொண்டு அவர்கள் சென்றார்கள். நீடித்த யுத்தத்தினால் அந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த அழிவுகளைப் பற்றி ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டு போனான். யுத்தம் எவ்வளவு கொடுமையானது என்று அடிக்கடி அவன் கூறினான். அதைப்பற்றி இருவருக்கும் விவாதம் பலமாக நடந்தது.

இரண்டு தினங்களுக்குப் பிறகு பிரயாணத் திசை மாறியது. கிழக்குத் திசையில் சென்றவர்கள் இப்போது தெற்கு நோக்கித் திரும்பினார்கள். வரவரப் பிரதேசங்கள் அடர்த்தியாகிக் கொண்டு வந்தன. சமவெளிப் பிரதேசம் மாறிப் பாறைகளும் சிறிய குன்றுகளும் எதிர்ப்பட்டன. இன்னும் தூரத்தில் பெரிய மலைத் தொடர்கள் வானை அளாவிய சிகரங்களுடன் தென்பட்டன. காடுகளின் தோற்றம் பயங்கரமாகிக் கொண்டு வந்தது. பட்சிகளின் இனிய குரல்களோடு ஏதேதோ இனந்தெரியாத கோரமான சப்தங்கள் கலந்து எழுந்தன.

அத்தகைய காட்டு வழிகளில் கொடிய மிருகங்களினால் ஏற்படக் கூடிய அபாயங்களைப் பற்றிப் பேச்சு எழுந்தது. நரிகள், சிறுத்தைப் புலிகள், கரடிகள், யானைகள் ஆகிய மிருகங்கள் அக் காடுகளில் உண்டு என்று ஆழ்வார்க்கடியான் கூறினான்.

"நரிகள் கூட்டமாக வந்தால் அபாயம் அல்லவா?" என்று வந்தியத்தேவன் கேட்டான். கடம்பூர் மாளிகையில் அவன் கண்ட பயங்கரக் கனவு அவனுக்கு நினைவு வந்தது.

"நரிகள் கூட்டத்தைக் காட்டிலும் ஒற்றை நரியின் ஊளையினால் அபாயம் அதிகம்" என்று ஆழ்வார்க்கடியான் கூறினான்.

"அது எப்படி, சுவாமிகளே!"

"இந்தக் காடுகளில் நரியும் சிறுத்தையும் சேர்ந்து வேட்டைக்குப் போகும். சிறுத்தை அங்கங்கே பதுங்கிக் கொண்டிருக்கும். நரி அங்குமிங்கும் ஓடி இரை தேடும். மனிதனையோ மான் முதலிய சாது மிருகத்தையோ, கண்டால் ஒற்றைக் குரலில் ஊளையிடும். உடனே சிறுத்தை பாய்ந்து வந்து விழுந்து கொல்லும். இப்படிச் சிறுத்தைக்கு ஒற்றன் வேலை செய்யும் நரிக்கு 'ஓரி' என்று பெயர்."

இப்படி இவர்கள் பேசிக் கொண்டு போனபோது சற்றுத் தூரத்தில் கடல் குமுறுவது போன்ற சப்தம் கேட்டது.

"கடற்கரையிலிருந்து வெகு தூரம் வந்துவிட்டோமே? இது என்ன சத்தம்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"பக்கத்தில் எங்கேயோ ஏரி அல்லது குளம் இருக்க வேண்டும். அதில் தண்ணீர் குடிப்பதற்கு யானைமந்தை வருகிறது போல் தோன்றுகிறது!" என்றான் ஆழ்வார்க்கடியான். (தொடரும்)

# சிறுவர் அரங்கம்




## பீர்பாலின் புத்திசாலித்தனம்

(நேற்றைய தொடர்ச்சி)

கிராமத்தைச் சேர்ந்த அப்பாவி. அவரை தர்பாரில் அழைத்து வந்து, தாறுமாறாக அவரை கேள்விகள் கேட்டு, அவரை அவமானப்படுத்துவதன் மூலம் அவர்கள் தன்னை அவமானப்படுத்த நினைக்கிறார்கள் என்று பீர்பால் புரிந்து கொண்டார்.

இதற்கிடையில் அக்பர், "பீர்பால்! நீ உடனே கிராமத்திற்குச் சென்று உன் தகப்பனாரை அழைத்து வா!" என்று கட்டளை இட்டார். அக்பரின் கட்டளையை ஏற்றுக் கொண்டு ரதத்திலேறி உடனே பீர்பால் தன் தகப்பனார் வசித்து வந்த கிராமத்தை



அடைந்தார். அவர் கால்களில் விழுந்து வணங்க, அவரும் தன் மகனை ஆசீர்வதித்தார். பிறகு இருவரும் உணவருந்தினர்.

இரவில் அவர் படுக்கைக்குச் செல்லும் முன், பீர்பால் தான் வந்த நோக்கத்தைத் தன் தந்தையிடம் மெதுவாக வெளியிட்டார். பரபரப்படைந்த அந்த முதியவர், "நானா தர்பாருக்கு வருவதா! நான் படிக்காதவன்! தர்பாரில் சக்கரவர்த்தி முன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்றோ, எப்படி பேசுவதென்றோ அறியாதவன்" என்று பதைபதைத்தார்.

"கவலைப்படாதீர்கள்! எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்றும் என்ன பேச வேண்டுமென்றும் நான் சொல்லித் தருகிறேன். தர்பாரில் நுழைந்ததும் சக்கரவர்த்தி முன் தலை தரையில் படும்படி விழுந்து சலாம் செய்யுங்கள். அவருடன் பேசும் போது, பணிவுடன் தலையை குனிந்தபடி பதில் சொல்லுங்கள். யார் உங்களிடம் எது கேட்டாலும் தலையசைத்துப் புன்னகை மட்டும் செய்யுங்கள். மற்ற விடயங்களை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார் பீர்பால்.

"மௌனம் சர்வார்த்த சாதகம்" என்று கூறிய பெரியவர் சிரித்துக் கொண்டே, "அப்படியே ஆகட்டும்!" என்றார்.

"எல்லாம் முடிந்த பிறகு யாராவது உங்களைப் பார்த்து ஏன் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லவில்லை என்று கேட்டால் உடனே நீங்கள் என்று பீர்பால் முதியவர் காதில் ரகசியமாகக் கூற, அவர் விழுந்து விழுந்து சிரித்தார். அதன்பிறகு பீர்பால் தன் தகப்பனாரை அழைத்துக் கொண்டு தலைநகரை அடைந்து, தர்பாருக்குள் நுழைந்தார்.

தர்பாரில் ஏற்கெனவே அக்பரும் மற்றவர்களும் வந்திருந்தனர். முதலில் பீர்பால் தனது தலை தரையில் படும்படி அக்பரை விழுந்து வணங்க, அவருடைய தகப்பனாரும் அப்படியே செய்தார். "வாருங்கள் பெரியவரே! உட்காருங்கள்!" என்று அக்பர் மரியாதையுடன் கூற முதியவரும் பீர்பாலுக்கருகே ஓர் இருக்கையில் அமர்ந்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகர் தங்கள் காலத்தில் பெரும்பாகத்தை பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர். – லா புரூயர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எந்தக் கூட்டமாயினும் சண்டையிட்டுக் குழப்புவோம்

எங்கள் தமிழினத்தின் தலைவிதியை என்னவென்று சொல்வது. ஆன அரசியல் தலைமை இல்லை. எங்கள் எதிர்காலம் குறித்த கட்டமைப்பை வடிவமைக்கக்கூடிய கல்வியாளர் படை இல்லை.

எங்கள் வரலாற்று அம்சங்களைத் தேடிப் பாதுகாக்கும் திட்டம் இல்லை. தவிர, அந்தப் பணியில் யாரேனும் ஈடுபட்டால் அதற்கும் எதிர்ப்பு விமர்சனம்.

ஐயகோ! வடங்கு, வட மாகாணத்தை அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தை உலுப்புகிறது.

கூடவே பொதுமக்களுடன் அன்னியோன்னியப்படாத எங்கள் மருத்துவ சமூகம் தமக்கென ஒரு தனிவழியில் பயணிக்கிறது.

இதற்கும் மேலாக, வருடந்தோறும் மாரி காலத்து வெள்ளத்தில் மூடை முடிச்சுக் கட்டுகின்ற வாழ்க்கை இன்னமும் தொடர்கிறது. அதுபற்றியெல்லாம் எங்கள் அரசியல்வாதிகளுக்கு அக்கறையும் இல்லை. அவசியமும் இல்லை.

அந்தோ! வயல்வெளியில் ஏக்கத்துடன் நிற்கின்ற விவசாயி, எங்கள் கடற்பரப்பில் இருக்கின்ற வளமெல்லாம் காவு போக, எங்கள் மீனவத் தொழிலாளி கடல் சுற்றி வெறுங்கையோடு வீடு திரும்ப, அடுத்த நாள் சீவியம் எப்படி என்ற ஏக்கத்தோடு உறங்குகின்ற பரிதாபம்.

கொடுமை. கொடுமையிலும் கொடுமை. வாழவேண்டிய இளம்பிள்ளைகள் போதைக்கு அடிமையாகி சிறைகளிலும் தெருவோரங்களிலும்...

ஓ! இறைவா ஏன்தான் இப்படியொரு இனத்தைப் படைத்து பந்தாடுகிறாய்.

பார் ஒவ்வொரு அபிவிருத்திக் கூட்டத்திலும் சண்டை. கூட்டத்தில் சண்டை பிடிப்பதே தங்கள் அரசியல் களத்தின் பண்படுத்தல் என்று எண்ணுகின்றவர்கள் தாம், நம் பிரதிநிதிகளாம்.

வேலையற்ற இளைஞர்களுக்கு என்ன செய்வது, வெளிநாடு செல்லவென்று புறப்பட்டு இடைவழியில் நொந்து கெட்டு நிற்கின்றவர்களின் எதிர்காலம் எப்படியாகும்.

படிக்கவழியின்றி பரிதவிக்கும் ஏழைகளுக்கு ஏதேனும் உபாயம் உண்டா? இது பற்றி யாதேனும் கதையாத நம் பிரதிநிதிகள் சண்டை மட்டும் தாராளமாகப் பிடிக்கின்றார்.

அதோ! ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், அதிகாரிகள் ரை கட்டி கோவையை கையில் எடுத்து மகிழ்வாக வருகின்றார். நம்பியாரும் நம்பியாரும் பிடிக்கின்ற சண் டையைக் கண்டுகழிக்க.

காட்சி தொடங்குகிறது. கோபம் கொப்பளிக்கிறது. பதற்றம் அதிகரிக்கிறது.

வார்த்தைகள் உரக்கிறது. மரபுப்படி அதிகாரிகள் அமைதியாய்...

ஆம், அங்கே நடப்பது அபிவிருத்திக் கூட்டமாம். ஓ! என் இனமே, என் சனமே! இன்னுமா நீ இவர்களுடன்.

என் செய்வோம். எழுதாக் குறை அழுதால் தீருமோ! நடக்கட்டும் நம் ஊழ்வினை தேயும் மட்டும்.

# பேரழிவு மீண்டும் ஏற்படாமல் இருக்க ஜனாதிபதி தேர்தலில் சிந்தித்து செயற்படுக

## வஜிர அபேவர்த்தன எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் இலங்கை மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட பேரழிவு மீண்டும் தங்களின் எதிர்கால பிள்ளைகள் அனுபவிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் காலி மாவட்ட கட்சி காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

பல வருடங்களுக்குப் பின்னர் எமது நாட்டு கிறிஸ்தவ மக்கள் இந்த முறை நத்தார் தினத்தைக் கொண்டாட முடியுமாக இருந்தது. கடந்த 3 வருடங்களாக பொருளாதார நெருக்கடி, உலகில் ஏற்பட்ட தொற்று நோய் நிலைமைகள் காரணமாக எமது நாட்டு மக்கள் மிகவும் அழுத்தத்துடனே இருந்தார்கள்.

சிங்கள, தமிழ், கிறிஸ்தவ மக்களுக்கு தங்களின் மத நிகழ்வுகளை அனுஷ்டிக்க முடியாத நிலை இருந்தது. இந்த அழுத்தம் இறுதியில் நாங்கள் வங்குரோத்து தேசமாக மாறினோம். அத்துடன் வங்குரோத்து அடைந்த இந்த நாட்டை பொறுப்பேற்க யாரும் இல்லாத சந்தர்ப்பத்திலேயே ரணில் விக்கிரமசிங்க இந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

எப்படியாவது ஒருவருடமும் 6 மாதங்கள் ஆகும் போது இந்த வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு முடியுமாகியுள்ளது. இதன் காரணமாக எமது வியாபாரிகளின் கடன் நாணய கடிதம் உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளும் நாணய கடிதமாக மாறியுள்ளது.

அத்துடன் 2024 ஜனவரியாகும்போது எமக்கு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜெக்கா நிறுவனம் உள்ளிட்டவை எமக்கு நன்கொடை வழங்கிய மற்றும் கடன் வழங்கிய குழுவினர் நிறுத்தியிருந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மீண்டும் இலங்கைக்குள் ஆரம்பிக்க இருக்கின்றன.

இவ்வாறான நிலையில் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு தற்போது பிரதான விடயமாக இருப்பது ஜனாதிபதி தேர்தலை எப்போது நடத்துவது என்பதாகும். அதே நேரம் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர்களாக களமிறங்கப்போவதாக பலரும் தெரிவித்திருக்கின்றனர். எவ்வாறு இருந்தாலும் இலங்கை மக்கள் இதுதொடர்பாக மிகவும் சிந்தித்து செயற்பட வேண்டி இருக்கிறது.

அத்துடன் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்வந்திருக்கும் வேட்பாளர்களுக்கு நாடொன்றை நிர்வகிக்க முடியுமா அல்லது இந்த வேட்பாளர்களுக்கு உலக தலைவர்களை சமாளித்துக்கொண்டு இலங்கையை முன்னுக்கு கொண்டு செல்ல முடியுமா என்பதை மக்கள் நன்கு சிந்தித்து பார்க்க வேண்டும் என்றார். (ம-7)

# மத்திய வங்கி ஆளுநர் விசேட அறிவிப்பு

(கொழும்பு)

எந்தவொரு அரசாங்கத்தின் கீழும் IMF இன்னுகுகு வேலைத்திட்டம் அடுத்த 4 வருடங்களுக்கு தொடர வேண்டும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கடன் நிவாரணம் மற்றும் சர்வதேச நிதி உதவிகளைப் பெறுவதற்கு இந்த முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஒப்பந்தத்தில் இருந்து ஒருதலைப் பட்சமாக விலகுவது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# உயர்தரப் பரீட்சைக்கான கருத்தரங்குகளுக்கு தடை

இந்த வருடத்துக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகளை நடத்தவும், அது தொடர்பான பிரசாரங்களை மேற்கொள்வதும் நேற்று வெள்ளிக்கிழமை (29) நள்ளிரவு முதல் தடை செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், விரிவுரைகள் உள்ளிட்டவற்றுக்கு நேற்று நள்ளிரவு 12 மணி முதல், பரீட்சை நிறைவடையும் வரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தவிர பரீட்சை தொடர்பான மாதிரி வினாத்தாள் உள்ளிட்ட வினாப்பத்திரங்களை அச்சிடுதல், அவற்றை விநியோகித்தல், பரீட்சை வினாத்தாள்களின் வினாக்களை வழங்குவதாக அல்லது அதற்கு சமமான வினாக்களை வழங்குவதாக பதாதைகள் காட்சிப்படுத்தல்கள், கையேடுகள் ஆகியவற்றை அச்சு அல்லது இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாக பிரசாரம் செய்யவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை மீறி செயற்படும் நபர்கள் அல்லது நிறுவனங்கள் தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையம் பொலிஸ் தலைமையகம் அல்லது தமது திணைக்களத்திற்கு அறியத்தருமாறு பரீட்சைகள் திணைக்களம் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும், 2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தர்தர உயர்தரப் பரீட்சை ஜனவரி 4 ஆம் திகதி முதல் ஜனவரி 31 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

# காசோலை மோசடிகளை தடுப்பதற்கான திருத்தம்

## நீதி அமைச்சரிடம் கையளிப்பு

(கொழும்பு)

காசோலை மோசடிகளை தடுப்பதற்காக சட்டதிருத்தம் மேற்கொள்ள நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை நீதி அமைச்சரிடம் கைளிக்கப்பட்டது.

காசோலைகள் மூலம் கொடுக்கல் வாங்கல்களின் போது மேற்கொள்ளப்படும் மோசடிகள், முறைகேடுகள் மற்றும் புறக்கணிப்புகள் காரணமாக இலங்கையில் வர்த்தக சமூகம் மற்றும் பொது மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களை கருத்தில் கொண்டு, அது தொடர்பான சட்டங்களை தற்காலத்துக்கு பொருத்தமான முறையில் திருத்தம் மேற்கொள்வதற்காக நீதி, சிறைச்சாலை மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் ஜனாதிபதி சட்டத்தரணி நிஹால் ஜயவர்தன தலைமையிலான நிபுணர்கள் குழுவொன்று இந்த வருடத்தின் முற்பகுதியில் நியமிக்கப்பட்டிருந்தது.

தற்போதுள்ள மாற்றுண்டியல் கட்டளைச் சட்டம் 95 வருடங்கள் பழைமை வாய்ந்த 1927 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட சட்டமாகும்.


அதன் பிரகாரம். குறித்த சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட விசேட நிபுணர்கள் குழுவினால் தேசிய மற்றும் சர்வதேச சட்ட நிலைமைகள் தொடர்பாக ஆய்வுசெய்து, சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய முறை தொடர்பாக அறிக்கை ஒன்றை தயாரித்து, அதன் குழு அறிக்கை நீதி அமைச்சரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நீதி அமைச்சில் இடம்பெற்றது.

காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும்போது இடம் பெறுகின்ற மோசடிகள், முறைகேடுகள் மற்றும் புறக்கணிப்புகள் தொடர்பாக இருக்கும் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள இந்த குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ள இருக்கிறது என நீதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## பதில் பொலிஸ்மா அதிபர்



(கொழும்பு)

போதைப்பொருள் வர்த்தகர்கள் தங்களது இருப்பிடங்களை மாற்றி தலைமறைவாவதை தடுப்பதற்கும் அவர்களை கைது செய்யவும், பதில் பொலிஸ்மா அதிபர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கான ஆலோசனைகள் சகல பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் துறை பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அதேநேரம், போதைப் பொருள் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களை தடுக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப்புகளில் எந்தவொரு நபருக்கும் பொலிஸாரால் அநீதி ஏற்படுமாயின் அது தொடர்பில், சிரேஷ்ட அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு அவர் குறிப்பிட்டுள்ளார். பழி வாங்கல் நோக்கத்துடன் எவரும் பாதிக்கப்படக்கூடாது என்பதில் அதிக கவனம் செலுத்துகின்றோம்.

இந்தநிலையில், போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைக்கு பொதுமக்கள் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.(நி-5-6)

# பச்சை மிளகாய் விலை கிடுகிடு உயர்வு

(கொழும்பு)

ஒரு கிலோ பச்சை மிளகாய் மொத்த விலையில் 1,300 முதல் 1,500 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை சில்லறை சந்தையில் இதன் விலை சுமார் 1,800 ரூபாய் என கூறப்படுகிறது.

அதன்படி, பச்சை மிளகாய் காய் ஒன்றின் விலை சுமார் 15 ரூபாவாக உள்ளதாக வாடிக்கையாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் கடந்த சில வாரங்களாக மிளகாய் உள்ளிட்ட மரக்கறிகளின் விலைகள் நாளுக்கு நாள் உயர்வடைந்து வருவதுடன் அரசாங்கம் இதில் தலையிட்டு மரக்கறிகளுக்கான நிர்ணய விலைகளை வெளியிடு மாறும் மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (நி-5-6)

# மதுபானங்களின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வற் வரி அமுலாகவுள்ளதால், மதுபான போத்தல்களின் விலைகள் அதிகரிக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 750 மில்லிலீற்றர் DCSL ரக மதுபான போத்தல் 90 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது.

அத்துடன், 375 மில்லிலீற்றர் மதுபான போத்தல் 50 ரூபாவினாலும் 180 மில்லி லீற்றர் மதுபானப் போத்தல் ஒன்றின் விலை 20 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளது. (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 600 | 500 | 600 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1200 | 1600 |
| தக்காளி | 700 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 150 |
| கோவா | 450 | 550 | 600 |
| கரட் | 500 | 750 | 1000 |
| பூசணி | 180 | 180 | 200 |
| புடோல் | 350 | 250 | 300 |
| வாழைக்காய் | 250 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 480 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 550 | 450 | 500 |
| பாகற்காய் | 800 | 600 | 1000 |
| வெண்டக்காய் | 350 | 240 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 200 |
| பயற்றங்காய் | 500 | 500 | 450 |
| லீக்ஸ் | 350 | 400 | 600 |
| பீற்றூட் | — | 600 | 800 |
| கறிமிளகாய் | 800 | 600 | 800 |
| முருங்கைக்காய் | — | — | — |
| போஞ்சி | 600 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 550 | 550 | 550 |
| கீரை - 1 பிடி | 150 | 200 | 250 |
| தேசிக்காய் | 800 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 800 | 600 | 600 |
| வெங்காயப்பூ | 900 | — | — |
| முள்ளங்கி | 250 | 300 | 450 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 120 | 200 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3004

நிதர்சன்




தசாப்தன்




மிதுனன்




வந்தனா




ஹாசினி




சாமந்தி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்டோ...

தெரிவிக்கும்போது அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"அடுத்த ஆண்டு (2024) ஜனவரி மாதம் முதல் பெறுமதி சேர் வரி 18% ஆக அதிகரிப்பதனால், பெற்றோல் விலை கூடுமானால் முச்சக்கரவண்டி கட்டணமும் அதிகரிக்கப்படும் என்றார்.

மேலும், பெற்றோல் விலை 50 ரூபாயிற்கும் அதிகமாக அதிகரிக்க வாய்ப்பு உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## கொரோனா...

மதவாச்சிப் பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சுவாசக் கோளாறு காரணமாக மதவாச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைகளுக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மருத்துவ பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-7)

## நாடளாவிய...

ரீதியில் கடந்த 17ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கடந்த 17ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையான ஒரு வார காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 17,666 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இருப்பினும், நத்தார் பண்டிகையை முன்னிட்டு பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டமையால் இரண்டு நாட்களுக்கு யுக்திய சுற்றிவளைப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், யுக்திய பொலிஸ் சுற்றிவளைப்புகள் கடந்த புதன்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்பட்டதுடன் இதன்போது 2,889 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அதற்கமைவாக நாடளாவிய ரீதியில் இதுவரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய சுற்றிவளைப்புகளில் 17,837 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட 850 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், 186 பேருக்கு எதிராக சட்டவிரோத சொத்து குவிப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் 1,187 சந்தேகநபர்கள் புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு ஏற்கெனவே சந்தேகநபர்களாக பட்டியலிடப்பட்டு தேடப்பட்டு வந்த 4,665 சந்தேகநபர்களில் 1,375 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே 10 கிலோ 510 கிராம் ஹெரோயின், 6 கிலோ 740 கிராம் ஐஸ் போதைப்பொருள், 288 கிலோ 500 கிராம் கஞ்சா, ஒரு கிலோ 70 கிராம் ஹஷீஷ் போதைப்பொருள், 35 கிலோ 800 கிராம் ஹூஸ் போதைப்பொருள், 3 கிலோ 350 கிராம் தூள் போதைப் பொருள், 18 கிலோ 50 கிராம் மாவா, 71,271 போதைப்பொருள் மாத்திரைகளும்பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் 2,110,500 கஞ்சா செடிகளும் அழிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## இலங்கை...

இடையிலான சந்திப்பொன்று நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரு நாடுகளுக்கு இடையேயான பொருளாதார உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்து விரிவான விவாதம் நடைபெற்றதுடன், முன்மொழியப்பட்ட கூட்டு திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரம் உள்ளிட்ட எரிசக்தி துறையில் முதலீடுகளை அதிகரிப்பதற்கான இந்தியாவின் திறன், எண்ணெய் சேமிப்பு தொட்டிகள், துறைமுகங்கள், திருகோணமலையில் ரயில்வே தொடர்பான கூட்டு திட்டங்கள் மற்றும் விவசாயம் மற்றும் மீன்பிடி துறைகளின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் திறன் குறித்து கலந்துரையாடப்பட்டது.

மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள கடன் மறுசீரமைப்பு வசதிகள் மற்றும் நிவாரணப் பொருட்கள், உணவு மற்றும் மருந்துகளை வழங்குவதன் மூலம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

நாட்டின் தலைவர்களின் வழிகாட்டுதலின்படி இலங்கையின் நலனுக்காக இலங்கை மக்களுடன் இணைந்து செயற்படுவதும் இந்திய - இலங்கை ஒத்துழைப்பு மற்றும் பதினான்கு படி நிலைகளை முன்னெடுத்துச் செல்வதே தமது பணி எனவும் இந்திய உயர்ஸ்தானிகர் மேலும் தெரிவித்தார்.

இரு நாட்டு தலைவர்களும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி இந்த திட்டத்தை செயற்படுத்த ஒப்புக் கொள்ளப்பட்டது. (ம-7)

## எதேச்சதிகாரமே...

ஹபரண மகா வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

நாட்டிலிருந்து திருடப்பட்ட அனைத்து சொத்துக்களையும் மீட்டெடுத்து, அந்த வளங்களை நாட்டின் தேசிய வருமானத்திற்குப் பயன்படுத்தி, மனித வளத்திற்காக முதலீடு செய்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"நாட்டில் குடும்பங்களின் வருமானம் 60 வீதமாக குறைந்துள்ள நிலையில், செலவின அளவு 90 விதமாக அதிகரித்துள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக 22 வீதமானோர்கடன் சுமையால் தவித்து வருகின்றனர். பாலர் பாடசாலை மட்டத்திலிருந்து பல்கலைக்கழக மட்டம் வரை கல்வியில் ஈடுபடும் 55 வீதமானவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் எதேச்சதிகாரமாக வரிச்சுமையை அதிகரிப்பதாலேயே நாடு இந்நிலைக்கு வந்துள்ளது. திருடர்களின் ஆணை பெற்று ஜனாதிபதி எடுக்கும் இவ்வாறான தீர்மானங்களை அங்கீகரிக்க முடியாது.

நல்லாட்சி அரசாங்கத்தின் சில தலைவர்கள் திருடர்களைப் பிடிக்காமல் திருடர்களைக் காப்பாற்றினார்கள். 2015 ஆம் ஆண்டில், நல்லாட்சி அரசாங்கம் நாட்டில் இருந்து திருடப்பட்ட வளங்களைத் தேடி நடவடிக்கை எடுக்கும் திட்டத்தை செயற்படுத்தியது.

திருடர்களை பிடிப்போம் என்று கூறிய தலைவர்கள் திருடர்களை காப்பாற்ற டீல் போட்டதால் இத்திட்டம் பாதியில் நிறுத்தப்பட்டது.

இவ்வாறு நிறுத்தப்படாதிருந்தால், திருடப்பட்ட வளங்களை நாடு பெற்று மனித வளத்தை பலப்படுத்தும்வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருக்கலாம்.

நாட்டிலிருந்து திருடப்பட்ட அனைத்து சொத்துக்களையும் மீட்டெடுத்து, அந்த வளங்களை நாட்டின் தேசிய வருமானத்திற்குப் பயன்படுத்தி, மனித வளத்திற்காக முதலீடு செய்து ஸ்மார்ட் நாடு, ஸ்மார்ட் கல்வி, ஸ்மார்ட் மாணவர் தலைமுறையை உருவாக்கும் வேலைத்திட்டத்தை நாம் அமுல்படுத்துவோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

லக்கி 7 VIP
திகதி 2023.12.29
சீட்டிழுப்பு இலக்கம் 0169
G 0 8 7 6 9 0 G

தன நிதானய
திகதி - 2023.12.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1373
H 10 43 58 72 H
35821

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3585
சீட்டிழுப்பு திகதி 29.12.2023
N 22 29 30 43
N 26818

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.29
சீட்டிழுப்பு இலக்கம் 0652
துலாம் 12 36 42 56 துலாம்
09690 21

மஹஜன சம்பத
திகதி 2023/12/29
சீட்டிழுப்பு இலக்கம் 5343
E 1 9 9 2 9 3

மெகா பவர்
திகதி 29/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1691
Z 01 11 17 70 72
62623

உத்தியோகபூர்வ முடிவுகள்
29.12.2023 வெற்றி வாரம் 051
K 0 2 2 4 5 0
62279
25,091,979.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2317 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.12.29 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 02 19 42 54 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,007,363.20
27869

சசிரி
வெற்றி வாரம் 421
2023.12.29
வெற்றி இலக்கங்கள் 01 04 21
பச்சை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,915,640/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4029 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.29 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 15 32 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,854,242.40
934103

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 23 18 23 45 75
1493
2023.12.29 வெள்ளி
50173 111323
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 485,259,206.20
DLB DEVELOPMENT LOTTERIES தொலை பேசி: 011-2 333 546-47

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2143
சீட்டிழுப்பு திகதி : 2023.12.29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,562,307.20
அத கோடிபதி ADA KOTIPATHI
29 41 68 73 Q
723876

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் இந்திய உயர்தர சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- தோசை தயாரிப்பவர்
- சிற்றுண்டி தயாரிப்பவர் (ஆண்/பெண்)
- உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண்)
- கணனி மூலம் சிட்டை தயாரிப்பாளர் (ஆண்/பெண்)

(18423)

**070 664 7466, 076 166 1986**

## MATHEMATICS

## (ENGLISH MEDIUM)

**ONLINE CLASSES FOR Gr - 8,9,10 and 11 - 2024**

By. S.MURALI
Tutorial Staff Royal College - Colombo - 07

(18411)

Contact No. **0773 557 447**

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா மற்றும் தாய்லாந்திலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட **கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer)** மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட **மின்னுயர்த்தியும் (Hoist)** எம்மிடம் உத்தர வாதத்துடனும் நியாயமான விலையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**(குறிப்பு - இந்தியா மற்றும் தாய்லாந்து கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே, போலிகளை கண்டு ஏமாறாதீர்கள்)**



ஆர்க். என். கம்பனி
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020

(18410)

Hotline : 071 535 7799/ 071 973 9917

## சிறிராம் ஜுவல்லர்ஸ்

இல. 158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடி.



- செய்கூலி, சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
- அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 01.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
  ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்
- அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலைவரத்தின் படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

(C-8045)

**077 165 1729, 077 773 0567, 021 222 8334**

## Canada and Italy Visa

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும்.மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

(18358)

**VISA CONSULTANT**
134, Adiyapatham Road,Thirunelvely, Jaffna.

**077 038 5584**

## தரம் 6 (2024)

### குழு வகுப்புகள்

ஆரம்பம் : 30.12.2023
சனிக்கிழமை 11.30

- அனைத்து பாடங்களும்
- ஆங்கில, தமிழ் மொழி மூலம்

(18397)

**NEWTON GROUP CLASSES**
No.18/18,Wyman Road, Nallur.
☎-077 792 3653

## வட...

யாழ். மாவட்டத்திலேயே டெங்கு தொற்றாளரின் தாக்கம் விரியமாக காணப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் டெங்கால் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

டெங்குத் தொற்றில் இருந்து பாதுகாக்க அனைவரும் தமது சுற்றுச் சூழலை துப்பரவாக வைத்திருக்குமாறும் சுகாதாரத் தரப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

(ம-7)

## பொங்கல் அகப்பை விற்பனைக்கு

தைப்பொங்கல் வியாபாரத்தை சிறப்பிக்க இன்றே முந்துங்கள்

- அகப்பைகள்
- விளக்குமாறு
- திருவுபலகை
- இருபலகை
- றொட்டித் தட்டு, சுளகு



மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

(16412)

**077 210 5286**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் மாவட்டத்தில் நல்ல சுற்றாடலில் வீடு வாடகைக்குத் தேவை. யாழ் நகரில் இருந்து 3 Km க்கு அப்பால் பிரதான வீதிக்கு அருகில் எதிர்பார்க்கப்படுகின்றது.

(18400)

**077 284 7850**

## வீடு வாடகைக்கு

கொழும்புத்துறையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு

(18430)

**077 435 0680**

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் பகுதியில் 6 3/4 பரப்பு தோட்டச் செய்கைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு

(18413)

**076 277 6856**

## வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.

**0777 554 528** (18357)

## CANADA

## VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-8049)
**0777-068-777**
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்(யாழ் நகர்) வேம்படிச் சந்திக்கு அருகாமையில் 1 பரப்பு(ஒன்று) சற்சதுரக் காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு

(18418)

**076 410 0840**

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

(C-8049)

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

**0777-068-777**

## Happy Supermarket - உரும்பிராய்

**உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...**

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 280 /= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 299 /= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 430 /= | |
| 1 Kg அரிசி மா | - 199 /= | |
| 1 Kg தீட்டல் பச்சை அரிசி | - 175 /= | |
| 1 Kg றவை | - 289 /= | |
| 1 Kg கோதுமை மா | - 185 /= | |
| 1 Kg Prima கோதுமை | - 190 /= | |
| 1 Kg சம்பா அரிசி | - 230 /= | Max 3Kg |
| 70g Baby Soap | - 116 /= | ~~145 /=~~ |
| 01 LUX Soap | - 165 /= | ~~175 /=~~ |
| 400g sustagen சஸ்ரயன் | - 3435 /= | ~~3900 /=~~ |
| 400g நெஸ்டமோல்ட் பெட்டி | - 750 /= | ~~830 /=~~ |
| 400g நெஸ்டமோல்ட் ரின் | - 1099 /= | ~~1190 /=~~ |
| 01 Supiri ரின் மீன் | - 480 /= | ~~850 /=~~ |
| 1 Kg Sunlight Rose பவுடர் | - 350 /= | ~~430 /=~~ |
| 01 Sunlight Soap | - 140 /= | ~~150 /=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50 /= | ~~80 /=~~ |

1025/=



~~1080/-~~

(18429)

**யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்**

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org